விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 26 புதன்கிழமை (08.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்த நோர்வே அரசு கடும் முயற்சி!



## அமெரிக்காவுடனும் பேச்சு

(ஒஸ்லோ)

இலங்கையில் நடைபெற்றுவரும் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நோர்வே அமைச்சரும், இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இதே வேளை இலங்கையின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பாக நோர்வேயும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)



## போர் நிறுத்தத்தை அமுல்படுத்த ஐ.நா. மீண்டும் வலியுறுத்தல்

(லண்டன்)

இலங்கையில் போர் நிறுத்தம் அமுல்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசினால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள சுமார் 14 சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் சிக்கியுள்ள ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்களின் நிலை குறித்து தாம் மிகுந்த கவலை அடைந்துள்ளதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. பொதுச் செயலரின் மனித உரிமைகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரிற்கான பிரதிநிதி வோல்டர் கீலின் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## " போர்ப் பிடிக்குள் மக்கள் " பிரிட்டிஷ் அரசு ஆழ்ந்த கவலை

(லண்டன்)

வடபகுதியில் தொடரும் போரின் பிடிக்குள் பொதுமக்கள் அகப்பட்டுள்ளமை தொடர்பாக தன்னுடைய ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள பிரித்தானியாவின் வெளி விவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற தன்னுடைய கோரிக்கையை மீள வலியுறுத்தியுள்ளார்.

படையினர் இறுதிக் கட்டத் தாக்குதலுக்கு தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த அவசரக் கோரிக்கையை விடுத்துள்ள பிரித்தானிய அமைச்சர், அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளும் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இராணுவம் தாக்குதல் நடத்துவதில்லை

### அமைச்சர் போகொல்லாகம விளக்கம்

(கொழும்பு)

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இராணுவம் தாக்குதல் நடத்துவதில்லை. தமிழ் சமுதாயத்தின் மனங்களை வென்றெடுக்க வேண்டியதே எங்களது விருப்பம்.

அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பொதுமக்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீது நேற்றும் ஷெல் தாக்குதல்

### முல்லை. சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

(லண்டன்)

புதுமாத்தளன் பகுதியில் அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயத்திற்குள் நேற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வரதராஜா தெரிவித்தார். நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும் புதுமாத்தளனில் இயங்கிவரும் (12ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி

# ஆர்ப்பாட்டம் செய்த தமிழர்கள் மீது பிரித்தானியப் பொலிஸார் தாக்குதல்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் பிரித்தானிய நாடாளுமன்ற முன்றலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்று திரண்டு நேற்றுமாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை அவர்களுக்கும் பொலிஸாருக்கும்இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

மோதலின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடிகள் மற்றும் சில பொருள்கள் வீசப்பட்டமையால் பிரித்தானிய நாடாளுமன்ற முன்றலில் சில மணிநேரம் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.



இதன்போது சிறுவர்களை பொலிஸார் தூக்கி வீசியதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அருகிலுள்ள தேம்ஸ் பாலத்திற்குச் சென்றனர். இதனால் தேம்ஸ் நதியில் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக குதித்து தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்ற அச்சம் நிலவியது.

இதையடுத்து மீட்புப் படகுகள்அங்கு வரவழைக்கப்பட்டன. அந்த சமயத்தில் இருவர் நதியில் குதித்துவிட்டனர்.

உடனடியாக அங்கு விரைந்த மீட்புப் படகு அவர்கள் இருவரையும் மீட்டது. அவர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிரதமர் கோர்டன் (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந். மத்திய உள்துறை அமைச்சர் மீது பத்திரிகையாளர் பாதணி வீச்சு

(புதுடில்லி)

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மீது சீக்கிய பத்திரிகையாளர் ஒருவர் பாதணி வீசியுள்ளார். இந்திரகாந்தி மறைவின் போது டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெகதீஷ் டைட்லர் மீது வழக்குத்தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்து வந்த சிபிஐ சமீபத்தில் டைட்லரை இந்த வழக்கிலிருந்து விடுவித்தது. இதற்கு எதிராக நாடு முழுவதும் சீக்கியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று டெல்லியில் நிருபர்களை சந்தித்தார் ப.சிதம்பரம். ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்ற தைனிக் ஜார்கன் பத்திரிகையைச் சேர்ந்த நிருபர் ஜர்னைல் சிங் எழுந்து சீக்கியர்களுக்கு எதிரான வன்முறை, டைட்லர் விடுவிப்பு குறித்து ஆவேசத்துடன் பேசினார்.

ஆனாலும் சிங் தொடந்து பேசவே, சிபிஐ ஒரு சுதந்திரமான அமைப்பு. அதை உள்துறையோ மத்திய அரசோ கட்டுப்படுத்த முடியாது என்றார் சிதம்பரம்.

இதைக் கேட்டு ஆத்திரமடைந்த அந்த நிருபர் தனது பாதணியைக் கழற்றி சிதம்பரம் மீது வீசினார். ஆனாலும் அந்தப் பாதணி அமைச்சர் சிதம்பரம் மீது படவில்லை. இதேபோன்ற சம்பவம் பாக்தாத்தில் முன்னாள் அமெரிக்க அதிபர் மீது நிருபர் பாதணி வீசியது பரபரப்பானது என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியே இழுத்துச் செல்லப்பட்ட ஜர்னைல் சிங் கூறுகையில், நான் செய்தது தவறில்லை. எனது செயலுக்காக மன்னிப்புக் கேட்க மாட்டேன் எனது அணுகுமுறை தவறாக இருந்திருக்கலாம். ஆனால் நான் எனது சமூகத்தின் கருத்தை வெளிப்படுத்தியுள்ளேன் என்றார்.

## மாரவிலவில் விமானப் பாகங்கள் மீட்பு; அதிர்ச்சியில் விமானப் படையினர்!

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் உள்ள மாரவில பகுதி வீடொன்றில் இருந்து விமானத்தின் பாகங்கள் சில மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளரும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்தே கம்பஹா மாவட்டத்தில் உள்ள கடற்கரைக் கிராமமான மாரவில பகுதியில் குறிப்பிட்ட இல்லத்தை நேற்று முன்தினம் சுற்றி வளைத்தனர்.

வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த விமானப் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் தெளி வாகப் பதிலளிக்காததால் அவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணை கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்த வீட்டின் உரிமையாளர் வான் படையில் முன்னர் பணியாற்றி ஓய்வு பெற்றவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் கண்டு பிடிக்கப்பட்ட விமான உதிரிப்பாகங்கள் மூன்று அடுக்குகளைக் கொண்டதாகக் காணப்பட்டதாகவும் இந்தப் பகுதியில் விமான பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது பொலிஸாரும் விமானப் படையினருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

## க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

தங்கவேலு கடோற்கஜன்-7ஏ பி சி, சண்முகலிங்கம் லக்சனா-7ஏ பி எஸ், ரவிச்சந்திரன் ரஜீதா-6ஏ 2பி எஸ், நடராஜக் குருக்கள் கீர்த்திகாசுதன்-6ஏ பி சி எஸ், கந்தசாமி கோபிநீதன்-4ஏ 4பி எஸ், நவரத்தினராசா துஷாந்தி-4ஏ 4பி ஏஸ், நித்தியானந்தம் தர்சினி-4ஏ 3பி சி, யோகேந்திரம் குயின்சி-4ஏ 3பி சி எஸ், கனகலிங்கராசா சோபிகா-4ஏ 2பி 2சி, தேவதாசன் சுதர்சினி-4ஏ 2பி 2சி எஸ், சங்கர் குணாளன்-4ஏ பி 2சி எஸ், நற்குணராஜா மிதுனன்-4ஏ 2பி சி.

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

சங்கீதா செல்வராஜா-8ஏ சி, ஜெ.தாட்சாயினி-6ஏ 3பி, க.கிசோர் -6ஏ 2பி சி, ச. செந்தூரன்-5ஏ 3பி சி, ச.மோகனப்பிரியா-5ஏ பி 3சி, ச.உசாந்தினி 4ஏ 2பி 2சி.

**யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

தவதராசா தவனீரஜன்-7ஏ பி சி, குகதாசன் வித்தியா தரன் -5ஏ பி 3சி, யமீலா சிவராசா-5ஏ பி 2சி எஸ், சிவாஜினி ஆராஅமுதன்-4ஏ 3பி எஸ், சிவனியா சிவராசா-4ஏ 4சி, சர்மிகா தர்மலிங்கம் 4ஏ 3சி எஸ்.

## நீர் விநியோகம் சீரானது

(யாழ்ப்பாணம்)

பிரதான நீர் விநியோகத்திற்கான 12" விட்ட நீர் ஏற்று குழாய் பலாலி வீதியில் தபாற் பெட்டிச் சந்திக்கு அருகாமையில் நேற்று முன் தினம் மாலையில் சேதமுற்று நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இதற்கான திருத்தப்பணிகள் மாநகர சபையின் நீர்வேலைப்பகுதி ஊழியர்களால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டு இன்று காலையிலிருந்து வழமை போன்று நீர் விநியோகிக்கப்படும் என மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சு)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 81 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார். இதற்கு ஆதரவாக 92 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்தன.

மக்கள் விடுதலை முன்னணி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களித்தது. ஐ.தே.கவும் முஸ்லிம் காங்கிரஸும் வாக்கெடுப்பில்கலந்து கொள்ள வில்லை. (ச-5,14)

## தாச்சிச்சுற்றின் இறுதிப் போட்டி

வசந்த எழுச்சி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறும்.

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் எ.உதயன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-14)

## போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டுள்ளார்

### நடேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தை இடையறாது முன்னெடுக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அதன் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாலசிங்கம் நடேசன் தெரிவித்துள்ளார்.

1985ஆம் ஆண்டு பூட்டானின் தலைநகர் திம்புவில் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வு திட்டத்தை ஏற்றுக் கொள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தயார் நிலையில் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழகத்திலிருந்து வெளியாகும் ஜனசக்தி தமிழ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போது அவர் அதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்க இராணுவத்துடனான யுத்தத்தை பிரபாகரன் மிகுந்த தன்னம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் இந்திய தேர்தலின் போது இந்திய காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு தமிழக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்கள் மீது விடுதலைப் புலிகளின் தலைவர் பேரபிமானம் கொண்டுள்ளதாகவும் தமிழக மக்களே எமது பலம் எனவும் நடேசன் தெரிவித்துள்ளார். அப்பாவி மக்கள் எதிர் நோக்கிவரும் பாரிய மனிதப் பேரவலம் குறித்து இந்திய மத்திய அரசு பாரா முகமாக செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (எ-1)

## ஈழத்தமிழர்களைக் காக்கக்கோரி தமிழகத்தில் இன்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைக்காக்கவும் மத்திய அரசின் துரோகத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் இன்று காலை 10 மணிக்கு சென்னை கலக்டர் அலுவலகம்முன் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது; இலங்கைத் தீவில் தமிழர்களை மரணபயங்கரம் சூழ்ந்துள்ளது. கடந்த இரண்டு நாட்களாக வருகின்ற செய்திகள் நெஞ்சைப் பதற வைக்கின்றன. தினமும் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டு வந்த நிலை மாறி அடுத்த சில நாட்களுக்குள்மூன்று லட்சம் தமிழர்கள் படுகொலைக்கு உள்ளாகும் பேரழிவு அச்சுறுத்துகின்றது. குழந்தைகள் பெண்கள் உட்பட தமிழ் இனமே மரணத்தின் பிடியில் சிக்கி எழுப்பும் ஓலக்குரல் இதயத்தை ரணமாக்குகிறது.

உடனடிப் போர் நிறுத்தம் அங்கு ஏற்படுத்த முன்வராவிட்டால் தமிழர்களின் இனப் படுகொலைக்கும் சிந்தப்படும் தமிழரின்இரத்தத்திற்கும் மத்திய அரசுதான் முழுப் பொறுப்பேற்க வேண்டும். அதன் விளைவுகள் மிக விபரீதமாக இருக்கும் என எச்சரிக்கின்றேன்.

ஈழத் தமிழர்களைக் காக்கவும் மத்திய அரசின் துரோகத்திற்கு கண்டனம் தெரி விக்கும் வகையில் இலங்கை பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் இன்று காலை 10 மணிக்கு சென்னை கலக்டர் அலுவலகம் முன், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. (ச-5)

## பயங்கரவாதம் அற்ற நாடு புதுவருடத்தின்பின் உருவாகும்

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

முப்பது வருடகாலமாக நாட்டை பெரிதும் பாதித்து வந்த பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படும் நாள் நெருங்கிவிட்டது. புதுவருடம் முடிந்தவுடன் பயங்கரவாதமற்ற நாட்டில் மக்கள் வாழ முடியுமென பிரதமர் ரத்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் தமதுரையில் தொடர்ந்தும் கூறுகையில்;

இந்த மகத்தான வெற்றியை ஈட்டுவதற்கு பாதுகாப்பு படையினர் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். புலிகள் மேற்கொண்டு வரும் பொய் பிரசாரங்களுக்கு பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள போதும் இதற்கு சில தரப்பினர் உதவி வழங்கி வருவதையிட்டு நாம் கவலையடைகிறோம் .

வடக்கில் விடுவிக்கப்படாத பிரதேசங்களிலுள்ள சிவிலியன்களின் நலன் கருதி அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தில் புலிகள் பொது மக்கள் மத்தியில் மறைந்து வாழ்கின்றனர். எனினும் மனித நேயத்துடன் செயற்பட்டு வரும் எமது படை வீரர்கள் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் பயங்கரவாதிகளுக்கெதிரான தாக்குதலில் மட்டும் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்கள் பற்ற சில சர்வதேச அமைப்புக்கள் முற்றாக உதாசீனம் செய்துள்ளன.

எனினும் ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இத்தகைய அமைப்புக்களின் நோக்கம் தோல்வி கண்டுள்ளன என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## ஆர்ப்பாட்டம் செய்த...

பிறவுண் தங்களுடன் பேசவேண்டும் என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரி யதாக பி.பி.சி. செய்தி கூறுகிறது.

இங்கிலாந்து இந்த விவகாரத்தில் தலையிடவேண்டும். இனப்படுகொலை தொடர்பாக இங்கிலாந்து தனது மௌனத்தை கலைக்க வேண்டும். அதுவரை போராடுவோம் என தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் பெருந்திரளாக திரண்டு நடத்திய போராட்டத்தை தொடர்ந்து இலங்கைக்கான இங்கிலாந்து சிறப்புத் தூதரும், முன்னாள் பாதுகாப்பு செயலாளருமான டெஸ் பிறவுண் தனது விடுமுறையை இரத்துச் செய்து விட்டு லண்டன் விரைந்துள்ளார்.

அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஒரு பொலிஸ் அதிகாரி கூறுகையில், இது சாதாரண பிரச்சினை போல தெரியவில்லை. அரசியல் பிரச்சினையாக தெரிகிறது. உயர் மட்டத்திலுள்ள அரசியல் தலைவர்கள் இதில் தலையிட்டாகவேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்.

வெஸ்ட்மின்ஸ்ட் பகுதியில் கூடியுள்ள தமிழர்களைக் கலைக்க பொலிஸார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அங்கு அமர்ந்து போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று வேறு பகுதிகளுக்கு திருப்பி விட்டனர். ஆனாலும் அங்கும் மக்கள் கலையாமல் தங்களது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்திற்குள் தமிழர்கள் புகுந்து விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக அங்கு அதிரடிப்படை பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட நான்குபேர் கைது செய்யப்பட்டதாக ஸ்கொட்லாந்துயார்ட் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பிரித்தானிய நாடாளுமன்ற முன்றலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்று திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல்ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே மேற்படி மோதல் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. (எ-5,14)

# இன்று ஒரு தகவல்

## தர்ம சங்கடம்

"எனக்கு மேடையேறிப் பேசுவதில் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. இருந்தாலும் திடீரென்று நாலு வார்த்தை பேச சொல்லி விட்டார்கள். எனக்கு ரொம்ப தர்மசங்கடமாகி விட்டது" என்றார் ஒருவர்.

நமக்கு ஒரு காரியத்தைச் செய்வதற்கு இஷ்டமில்லை. ஆனால் செய்துதான் ஆகவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந் நிலைமையைத் தான் நாம் தர்மசங்கடம் என்று சொல்கிறோம்.

ஆனால் அது தவறு என்கிறார் ஒரு ஆன்மீகப் பேச்சாளர். தர்ம சங்கடம் என்பதற்கு அவர் சொல்லும் விளக்கம் என்ன தெரியுமா?

மனிதன் எத்தனையோ தர்மங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு தர்மங்களை செய்ய வேண்டிய சூழ் நிலை ஏற்படுகிறது.

அந்தச் சமயத்தில் அவன், அந்த இரண்டு தர்மத்தில் எந்த தர்மத்தை செய்வது? எதை விடுவது? என்று தவிக்கிறான். அதுதான் தர்ம சங்கடம் என்கிறார்.

இதற்கு எவ்வளவோ உதாரணம் இருக்கிறது. இராமாயணத்தில் தசரதனுக்கு ஒரு தர்மசங்கடம் ஏற்பட்டது.

அதாவது கைகேயிக்கு கொடுத்த சத்தியத்தை காப்பாற்ற, பரதனுக்கு முடிசூட்ட வேண்டும்.

இன்னொருபக்கம் அவனுடைய குலமரபுப்படி மூத்தவனுக்குத்தான் பட்டம் சூட்ட வேண்டும். அதாவது இராமனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும்.

என்ன செய்வது?

சத்திய தர்மத்தைக் காப்பாற்றுவதா?

மரபு தர்மத்தைக் காப்பாற்றுவதா?

தசரதன் தவிக்கிறான். இதுதான் தர்ம சங்கடம். கடைசியில் சத்திய தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான்.

இருந்தாலும் அதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், தசரதன் சத்திய தர்மத்தைக் காப்பாற்றப் போக அதுவே அவனுடைய மரபு தர்மத்தைக் காப்பாற்றி விடுகிறது.

எப்படித் தெரியுமா? தான் முடிசூட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரதனுக்கு ஏற்படாமல் போய் விடுகிறது.

அதனால் தசரதன் ஒரே சமயத்தில் சத்தியத்தையும் காப்பாற்றினான். மரபையும் காப்பாற்றினான்.

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்" அவன்.

இது தசரதனைப் பற்றி வாலி சொன்ன வார்த்தை.

நமக்கெல்லாம் ஒரே நேரத்தில் பல தர்மங்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தால் குழம்பக்கூடாது. சத்திய தர்மத்துக்குத்தான் முதலிடம்.

எல்லா தர்மங்களையும் விட 'சத்தியம்' தான் உயர்ந்தது. பீஷ்மருக்கு ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டது.

அந்த சமயத்தில் அவர் சத்தியத்தை காப்பாற்றுவேன் என்பதில் உறுதியாக இருந்தார்.

அது என்ன தர்மசங்கடம் என்றால்,

"வாழ்நாள் முழுவதும் நான் பிரம்மச்சாரியாகவே இருப்பேன்" என்று அவர் சத்தியம் செய்தார்.

ஆனால் அவருடைய ஆச்சாரியன் பரசுராமரோ "நீ இவளை (அம்பையை) திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றார்.

ஒரு பக்கம் சத்தியம். இன்னொருபக்கம் குருவின் கட்டளை. என்ன செய்வது?

இவர் சத்தியத்தைத்தான் காப்பேன் என்று திடமாக இருந்தார். அதனால் இரண்டு பேருக்குமிடையில் சண்டை ஏற்பட்டது.

கடைசியில் வாய்மைதான் ஜெயித்தது. பரசுராமர் தோற்றுப் போனார்.

இன்றைக்கு இந்த தகவலை வாசிப்பவர்கள் இனிமேல் தர்மசங்கடம் ஏற்பாட்டால் எப்படி முடிவு எடுக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவன் இருந்தான்.

"சேர்... எங்க அப்பா தஞ்சாவூரில் ஒரு பெண் பார்த்திருக்கிறார். கோயம்புத்தூரிலும் ஒரு பெண் பார்த்திருக்கிறார். எனக்கு மிகவும் தர்மசங்கடமாகி விட்டது. இதற்கு நீங்கள் தான் ஒரு வழி கூற வேண்டும்" என்றான்.

நான் பார்த்தேன், "தம்பி இதில் குழப்பமே வேண்டாம். உனக்கு எந்தப் பெண் பிடிக்கிறதோ அதையே கல்யாணம் பண்ணிக்கொள்" என்றேன்.

அவன் கோபமாக என்னை முறைத்துப் பார்த்தான்.

"சேர்... எங்க அப்பா பார்க்கிற பெண் எனக்கில்லை. அவருக்கு! அதுதான் எனக்கு தர்மசங்கடம்!" என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு

## விழாவை முன்னிட்ட செயன்முறைப் போட்டி முடிவுகள்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கடந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற செயல்முறைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோரின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆண்டு விழாவில் வழங்கப்படவுள்ளது. பரிசு பெறுபவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கோலம் போடுதல்**

**மத்திய பிரிவு**

பொ. கஸ்ரோ - சாவகச்சேரி, இந்துக்கல்லூரி, க. சர்மிலா - கொட்டடி நமச்சிவாய வித்தி, அ. யோகேஸ்வரி, கு. சிந்துஜா - வண். நாவலர் மகா வித்தி.

**மேற்பிரிவு**

பா. மயூரதி - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, அ. ஜெயந்தினி - தெல்லிப்பழை துர்க்காபுர மகளிர் இல்லம், த. சிவாஜினி - இராமநாதன் கல்லூரி.

**மாலை கட்டுதல்**

**மத்தியபிரிவு**

வி. ஸ்ரீதரன் - இணுவில் இந்துக் கல்லூரி, ஞா. கஜேந்தினி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ப. பாலகிருஷ்ணா - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.

**மேற்பிரிவு**

இ. ஜானகி - இராமநாதன் கல்லூரி, ஸ்ரீ. மோகனமுரளி - இணுவில் இந்துக்கல்லூரி, அ. ஜெயந்தினி - துர்க்காபுரம் மகளிர் இல்லம், சி. லோஜன் - இணுவில் இந்துக் கல்லூரி.

**தோரணம் பின்னுதல் போட்டி**

**மத்திய பிரிவு**

ஜெ. மகிந்தன் - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, ச. சாம்பவி - யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஞா. விதுசன் - வண். நாவலர் மகா வித்தி.

**மேற்பிரிவு**

த. ஜெனீஸ் - இணுவில் இந்துக் கல்லூரி, ஸ்ரீ. அருஷன் - உரும்பிராய் இந்துக் கல்லூரி, பா. ஸ்ரீரமணன் - உரும்பிராய் இந்துக் கல்லூரி.

சைவசமய அறிவுப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரம் வருமாறு,

**தரம் - 1**

யோ. நிவேதிகா - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, க. காருண்யா - யாழ்ப்பாணக் கல்லூரி, ச. கிஷ்கிந்தராம் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**தரம் - 2**

உ. சருணுகா - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, ஆ. அமிர்தா - காரைநகர் கிழவன்காடு கலா மன்ற அறநெறிப் பாடசாலை, ஜெ. கயல்விழி - சங்கானை சிவப் பிரகாச வித்தி, ஜெ. லோகேஸ்வரி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

**தரம் - 3**

கி. அபிராமி - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, அ. அபிநந்தன் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, உ. விதுஷன் - புனித ஜோன் பொஸ்கோ வித்தி, ம. பவித்திரன் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.

**தரம் - 4**

த. நீலலோகன் - புனித ஜோன் பொஸ்கோ வித்தி, ப. சர்மிகன் - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, ஆ. அருந்தா - காரைநகர் கிழவன் காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை, பா. கஜானி - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி.

**தரம் - 5**

ப. மிஷாந் - யாழ். இந்துக்கல்லூரி, க. கண்ணன் - யாழ். இந்துக் கல்லூரி, தே. சுதனிகா - வேம்படி மகளிர் கல்லூரி.

**தரம் - 6**

க. சர்ஜனன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ம. திரிஷிகா - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, இ. வித்தியா - காரைநகர் கிழவன்காடு, கலாமன்ற அறநெறிப் பாடசாலை.

**தரம் - 7**

தே. லக்ஸ்மன் - யாழ். இந்துக் கல்லூரி (தங்கப்பதக்கம்), செ. சேந்தன் - யாழ். இந்துக்கல்லூரி, இ. சிவேஸ்வரன் - யாழ். இந்து கல்லூரி.

**தரம் - 8**

வி. துவாரகா - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, க. புவெஸ்ரியா - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, வே. கிருஷ்ணவி - அச்சுவேலி புனித தெரெசாள் மகளிர் கல்லூரி.

**தரம் - 9**

இ. பிரணவன் - யாழ். இந்துக் கல்லூரி, இ. வினு - யாழ். இந்துக் கல்லூரி, தே. கேதினி - கோண்டாவில் இந்து மகா வித்தி.

**தரம் - 10**

சா. மதுறமி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, த. ஹேமதர்சன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ச. யதுஷன் - யாழ். இந்துக்கல்லூரி.

**தரம் - 11**

மா. வருணபாலன் - யாழ். இந்துக் கல்லூரி.

**தரம் - 12**

ப. மயூரி - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி, இ. யாழினி - நயினாதீவு மகா வித்தி, இ. இஜிதா - இணுவில் இந்துக் கல்லூரி, சு. கொலஸ்ரிகா - சன்மார்க்க மகா வித்தி.

**தரம் - 13**

க. சிந்துஜா - கலாநிதி. ஆ. தியாகராஜா மகா. வித்தி, காரைநகர், க. சிவகௌரிநாயகி - தெல்லிப்பழை, யூனியன் கல்லூரி, ப. போஜினி - என். சி. ஏ. கல்விநிலையம், இணுவில். (ஓ)

# இராசி பலன்

*08.04.2009*
*(பங்குனி 26, புதன்கிழமை)*
*சதுர்த்தசி முன்னிரவு 09.14 மணிவரை*
*உத்தரம் பிற்பகல் 3.55 மணிவரை*
*இராகுகாலம் 12.07-1.37 மணிவரை*
*சுபநேரம் 4.37-6.07 மணிவரை*
*திருக்கோணேஸ்வரம் கோணேஸ்வரர் கொடியேற்றம், பங்குனி உத்தரம், அமிர்தசித்தம்*

| | |
|---|---|
| மேடம் | சத்துரு ஜெயம், திடீர்பயணம், செய்தொழில் விருத்தி, எடுத்த காரியம் கைகூடும். |
| இடபம் | வியாபார விருத்தி, பூர்வ புண்ணிய கருமம், புத்திரரால் கவலை, காரிய இடையூறு. |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம். |
| கடகம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை. |
| சிங்கம் | குடும்பக் கவலை, விதண்டா வாதம், காரிய தாமதம், தன விரயம். |
| கன்னி | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், போசன நன்மை. |
| துலாம் | உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், பெரியோர் உதவி, தனவிரயம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், பெருமையடைதல். |
| தனுசு | சுபநிகழ்வு, தூரதேசச் செய்தி, ஆரோக்கிய நிலை, பிறர் உதவி. |
| மகரம் | ஆன்றோர் உதவி, உடல் உழைப்பு, தேவையற்ற அச்சம், கட்டுப்பாடு. |
| கும்பம் | வீண் தொல்லை, காரிய தடங்கல், பணக்குறைவு, போசன சுகம். |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், காரிய அனுகூலம், தனலாபம். |

வளவன்

# 2010 ஆம் ஆண்டுக்கான பாடநூல்கள்

## நவம்பர் மாதத்தில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்களை இவ்வருடம் நவம்பர் மாதமளவில் பாடசாலைகளுக்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் இடம்பெற்ற மேலதிக வாசிப்பு நூல் நடமாடும் விற்பனை நிலைய ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது, கடந்த காலங்களில் பாடநூல் விநியோகத்தில் ஏற்பட்ட தவறுகள் சரி செய்யப்பட்டு, 2009 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல் விநியோக நடவடிக்கைகளின் போது முடிந்தளவு வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் உட்பட சகல பிரதேச பாடசாலை மாணவர்களுக்கும் பாடநூல் உரிய காலத்திற்குள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டன. (ஓ-4)

# இலங்கை வங்கியின்

## முகாமைத்துவ பயிலுனர்

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுனர் பதவிக்கு விண்ணப்பித்த கீழ்வரும் பரீட்சார்த்திகளை வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந. சிவரத்தினம் இம்மாதம் 16 ஆம் திகதி காலை இலங்கை வங்கியின் யாழ். அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றார்.

அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

கே.ஏ. ஜெயகரன் - சென்ஜோன்ஸ் கல்லூரி, உத்தியோகத்தர் விடுதி, டபிள்யூ. மதனன்- அரியாலை, பி. செல்வகுமார் - நல்லூர், செல்வி. எஸ். ஏ. சிவராஜசிங்கம் - கோண்டாவில் மேற்கு, கே. கஜீரன் - கந்தர்மடம், செல்வி. கே. காந்தராஜா - வட்டுக்கோட்டை, எஸ். கிருஷ்ணா - நாவலர் வீதி, யாழ்., எஸ். முரளிதரன் - கந்த உடையார் லேன், ஏ. நிதர்சன் - பிறவுண் வீதி, ஈ. சந்தனூ - பாசையூர், ஐ. செந்தீஸ்வரி - திருநெல்வேலி, எஸ். சுபாஸ்கர் - வல்வெட்டி, கே. சுகிர்தா - நல்லூர், வி. சுகந்தி - கோண்டாவில் கிழக்கு, செல்வி. எஸ். தயானந்தன் - களபூமி காரைநகர், பி. தினேஸ்குமார் - திருநெல்வேலி, ஆர். வாசுகி - கொக்குவில் மேற்கு, செல்வி. எஸ். வால்வின் - யாழ். ஆஸ்பத்திரி வீதி. (ஓ)

## மஹா கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை புலோலி மேற்கு ஆலடி பிள்ளையார் ஆலய பஞ்சகுண்டபக்ஷ - புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு பிரதிஸ்டா பிரதமகுரு சிவஸ்ரீ. சிவ. சிவகுமாரக் குருக்கள் (அல்வாய் வேலிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்) தலைமையில் நடைபெற வுள்ளது.

மாலை 4 மணிக்கு வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணமும் சுவாமி வீதியுலாவும் இடம் பெறும். (ஓ-35)

◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

நீர்வையம்பதி அருள்மிகு வீர பத்திர பெருமாள் ஆலய நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை வியாழக் கிழமை காலை 9.மணியளவில் நடை பெற வுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ சா .சோமதேவர் குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேக விழாவில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தன் "கும்பாபிஷேக தத்துவம்" எனும் தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால்பிரதிவெள்ளிக்கிழமைதோறும் நடத்தப் பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறு நாள் வெள்ளிக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு திருநெல் வேலி முத்து தம்பி. வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம் பெற உள்ளது.(ஒ-35)

## வடமராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு தமிழ்த் தினப் போட்டி பற்றிய சுற்று நிரூபம் இதுவரை கிடைக்கப் பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் வடமராட்சி கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பார்வையிட்டு பிரதி எடுத்துக் கொள்ளலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்தடுப்பூசி (A.R.V) இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை கடற்கரை வீதி, உயர் தொழில் நுட்பக் கல்லூரி முன் பாகவும், பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை பஸ்தியன் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள் ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-2)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அம்பலம் குழுமத்தினரின் ஏற்பாட்டில் ந. சத்தியபாலனின் 'இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்' என்னும் கவிதை நூல் வெளியீடு நாளை மறுநாள் வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கோகுலராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையை துவாரகனும், மதிப்பீட்டுரையை அ.யோகராசா, சி.ரமேஷ் ஆகியோரும் நிகழ்த்துவர். நூலின் முதற் பிரதியை வைத்தியகலாநிதி வை.யதுநந்தனன் பெற்றுக் கொள்வார். பதிலுரையை நூலாசிரியர் ந. சத்தியபாலன் வழங்குவார். (ஓ)

## பொங்கல் விழா

(மருதங்கேணி)

மேலைப்புலோலி வாணக்குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது. சனிக் கிழமை நண்பகல் 11.30 மணிக்கு விசேட பூசை ஆரம்பமாகி 1.30 மணி வரை நடைபெறும்.

நேர்த்திக் கடன்களை செய்வோர் குறித்த நேரத்திற்கு முன்பு செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள். (ஓ-35)

## இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலய தவக்கால ஆராதனை நாளையும் நாளை மறுநாள் (பெரிய வியாழன் பெரிய வெள்ளி) மாலை 5 மணிக்கு நடை பெறவுள்ளன.

பெரிய வெள்ளியன்று திருப்பலி முடிவுற்றதும் 1942 ஆம் ஆண்டு முதல் பாரம்பரியமாக நடாத்தி வரும் உடக்குப் பாசின் ஒரு பகுதியான இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இயங்கு நிலையில் காண்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் பல இடங்களில் இருந்து கிறிஸ்தவர்கள் வருகை தந்து ஆராதனைகளில் பங்கு பற்றுவது வழக்கமாகும். (ஓ-39)

## கணனிப் பிரிவு அங்குரார்ப்பணம்

யாழ். புத்தூர் புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய கணனி பிரிவு அங்குரார்ப்பண வைபவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் கு. ரவிச் சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக்கல்வி அலுவலக கணக்காளர் கே.கமலரூபன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்வி அலுவலக கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.வி. மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் யாழ். கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவின் கட்டாயக் கல்வி தொடர்பான பெற்றோருக் கான விழிப்புணர்வுக் கருத் தரங்கு சிறப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## இடம் பெயர் முகாம்களில் தொற்றுக்களை கட்டுப்படுத்த வைத்தியர்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணத்திலுள்ள இடம் பெயர்ந்தவர்களின் முகாம்களில் தொற்றுக்களை கட்டுப்படுத்த வைத்தியர்களால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அதிக வறட்சி காரணமாகவே இந்த நோய் தொற்று ஏற்படுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நோய் தொற்றுக் காரணமாக 50 பேர் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)


# PATRICIAN INSTITUTES

## பற்றிசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

### தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம் : 15.04.2009

## COMPUTER COURSES

| | |
|---|---|
| A.ADVANCED IN COMPUTER PROGRAMMING | DURATOIN 8 MONTHS |
| B.DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATOIN 6 MONTHS |
| D.DIPLOMA IN TYPE SETTING | DURATOIN 3 MONTHS |
| C.DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATOIN 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATOIN 6 MONTHS |
| F. INTERNET & E-MAIL | DURATOIN 1 MONTH |
| G. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATOIN 3 MONTHS |
| H. DIPLOMA IN WEP MULTIMEDIA | DURATOIN 4 MONTHS |
| I. DIPLOMA IN MICRO MEDIA | DURATOIN 4 MONTHS |
| J. DIPLOMA IN SOFTWARE ENEINEERING | DURATOIN 6 MONTH |
| K. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATOIN 6 MONTH |

## CERTIFICATE COURSES

| | | | |
|---|---|---|---|
| 1. Ms WORD | - | 2007 XP | 10. FLASH |
| 2. MS EXCEL | - | 2007 | 11. PRINT SHOP DELUXE |
| 3. MS ACCESS | - | 2007 XP | 12. ADDPE PHOTO SHOP |
| 4. MS POWER POINT | - | 2007 XP | 13. PAGE MAKER |
| 5. VISUAL BASIC | | | 14. IT |
| 6. JAVA,JAVASCRIPT | | | 15. C++ |
| 7. MYOB | | | 16. HTML |
| 8. ACCPACK | | | |
| 9. COREL DRAW | | | |

### DURATION 3 MONTHS EACH

| | |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3.மோட்டார் வாகனம் திருத்துதல் (PETROL & DIESL) (வாகனங்களின் செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலெக்ரிஷன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங் | காலம் 6 மாதங்கள் |
| 5. வானொலி,தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் (OSCILLOSCOPE) அசைவுக்காட்டியினை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும் | காலம் 6 மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி(On the job training) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 7. மின் ஒட்டுனர் பயிற்சி (Arc weiding & on the job training வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 8. மர வேலை (With use of mechinery) (On the job training வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 9. குளிர் சாதனப் பெட்டி திருத்துதல் (A.C.Repairing | காலம் 6 மாதங்கள் |
| 10. PLUMBING | காலம் 6 மாதங்கள் |
| 11. MASONARY | காலம் 6 மாதங்கள் |

### குறிப்பு

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் (Parishpriest) சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில்சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/2285)

மேலதிக விபரங்களுக்கு:

REGISTRAR
PATRICIAN INSTITUTE
61 (59) St. PATRICK'S
ROAD, JAFFNA.

TP. 021 222 6148
Fax : 021 222 6148
E-Mail : Spitee@Sltnet.lk

# யுத்தம் நிறைவடைந்ததும் அரசு அரசியல் தீர்வை முன்வைக்கும்

## அமைச்சர் மைத்திரி பால சிறிசேன

(கொழும்பு)

படையினரால் தற்போது முன்னெடுக்கப்படும் யுத்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அரசாங்கம், அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சுமார் 25 வருடங்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ அலுவல்கம் திறக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், வடக்கு - கிழக்கு மக்களுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்த போதிலும், யுத்தச் சூழ்நிலை காரணமாக அத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்தத் தொடர்புகள் இப்போது மீண்டும் ஏற்படத் தொடங்கியுள்ளன.

யுத்தத்திற்கு இன்னும் சில நாட்களில் முடிவு கட்டப்பட்டு விடும். அடுத்து, அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்றார். (ஓ-2)

# போலி ரூபா நோட்டுகள் அச்சடித்த இரு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

போலி ரூபா நோட்டுகளை அச்சடித்ததாகக் கூறப்படும் இரு சந்தேக நபர்களை பாணந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் நான்கு லட்சத்து ஆறாயிரத்து நானூறு ரூபா போலி நோட்டுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

பாணந்துறை தெற்குப் பெரலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சனத் தஸ நாயக்க தலைமையிலான பொலிஸ் குழு பாணந்துறை அலுபோமுல்ல அருக்கொடையிலுள்ள வீடு ஒன்றை கடந்த வியாழனன்று சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர்.

இதன் போதே கள்ள நோட்டுகளுடன் இவ்விரு சந்தேச நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருந்த வீட்டில் பொலிஸார் சோதனையிட்ட போது அவ் வீட்டிலிருந்து இரண்டாயிரம் ரூபா, ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா, நூறு ரூபா உள்ளிட்ட கள்ள நோட்டுகள் அச்சடிக் கப்பட்டிருப் பதைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன் கள்ள நோட்டுகள் அச்சடிப்பதற்காகப் பயன்படுத்திய கணனி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றி இரு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொறியியலாளராகவும் தொழிற்சாலை அதிகாரியாகவும் தொழில் புரிந்து வருவதாக பாணந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-4)





வழமை போல், புதுவருடத்திற்காக மக்கள் வங்கியில் கொடுக்கல் வாங்கல் செய்யும் உங்களுக்கு, இம்முறையும் பெறுமதி மிக்க பரிசு ஒன்றை வழங்க மக்கள் வங்கி தயாராகவுள்ளது.

ரூ.25,000 பெறுமதியான சான்றிதழுக்கு 2 கோப்பைகள் அல்லது ஒரு சுடுநீர் போத்தல்

ரூ.15,000 பெறுமதியான சான்றிதழுக்கு ஒரு கோப்பை

சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் பரிசுகள்

புதுவருடத்தின் சுபவேளையில் ஏப்ரல் 14ம் திகதி காலை 7.00 மணி முதல் நாடெங்கிலுமுள்ள சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம்.

- திருக்கணித பஞ்சாங்கப்படி 14.04.09 செவ்வாயன்று நள்ளிரவு 12.47க்கும், வாக்கிய பஞ்சாங்கப்படி நள்ளிரவு 11.07க்கும் புதுவருடம் பிறக்கின்றது.
- திருக்கணித பஞ்சாங்கப்படி அன்று இரவு 08.47 முதல் பின்னிரவு 04.47 வரையும், வாக்கிய பஞ்சாங்கப்படி மாலை 07.07 முதல் பின்னிரவு 03.07 வரையும் புண்ணிய காலமாகும்.
- 15.04.09 புதன்கிழமை அதிகாலை 05.00 முதல் 06.02 வரையும் 16.04.09 வியாழக்கிழமை காலை 06.01 முதல் 07.13 வரையும் காலை 7.25 முதல் 09.16 வரையும் கைவிஷேடம் செய்ய உகந்த காலமாகும்.
- இரு பஞ்சாங்கங்களினதும் புண்ணிய காலங்களில் சகலரும் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.
- 20.04.09 திங்கட் கிழமை காலை 06.01 முதல் 07.13 வரை பெரியோர் தரிசனத்துக்கும் 15.04.2009 புதன்கிழமை அதிகாலை 05.00 முதல் 06.00 வரையும் 16.04.09 வியாழக் கிழமை காலை 07.37 முதல் 09.37 வரையும் பூமிப் பிரவேசத்துக்கும் ஏற்ற காலமாகும்.

புதுவருட சுபவேளையில் எம்முடன் இணைந்து, பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

2006 2007 2008 2008

www.peoplesbank.lk

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி





# வட்டுக்கோட்டை சங்கர
## வீரபத்திரர் சமேத பத்தி
# தேர்த் திருவிழா சிறப்பு

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி என்னும் திவ் விய சேத்திரத்தில் அருள் பாலிக்கும் பத்திரகாளி அம்பாளின் தேர்த் திருவிழா இன்றாகும். அன்னையும், அப்பனும் சற்பரூ பமாக அருள் பாலிக்கும் அருளை அவ்வடியார்களும் காட்சிகள் கிடைத்தவர்களும் அனுபவ ரீதியாக நன்கறிவார்கள். அடியே னும் மஹோற்சவ குரு என்ற வகையில் பல காலமாக அறிவேன்.

பஞ்ச திருத்தியங்களின் அடிப்படையாக அமைவது மஹோற்சவமாகும். அந்த வகையில் தேர், தீர்த்த உற்சவங்களும் முக்கியமானவையாகும். ஆலய உற்சவங்களும்,கிரியைகளும் மனிதர்களுடைய ஆத்மரீதியா கவும் உடல் ரீதியாகவும் சம்பந்தப் பட்டவை என ஆக மங்கள் கூறுகின்றன உக்கிரகமான ஸ்ரூபம் படைத்தவளாக இருந்தாலும் மென்மை யான ஹ்ருதயம் கொண்டவள் காளி. சரணமடைந்தவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றித் தருபவள் பத்திரகாளி. பத்ர என்ற சொல்லுக்கு நல்லது,க்ஷேமமானது என்ற பொருள். பத்திரகாளி எல்லாக் கோடி மங்களங்களையும் வாரி வழங்கும் அன்னை என்பதாகும். ஆகவே அன்னையின் அருளை பெறுகின்ற நாம் அன்பாகவும், காருண்யமாகவும், பண்பானவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும், சீழ்ப்படிவு, குருபக்தி, பெற்றோரை முதியோரை மதித்து வணங்கி நாமும் நல்ல பண்புற்றவர்களாக வாழ வேண்டும். இன்றைய தேர்த்திருவிழா உற்சவ நன்நாளில் ஆலய அறங்காவலர்கள் உபய காரர்கள், இந்து வாலிபர் சங்கத்தினர்,அடியார்கள்,அன்பர்கள்,பக்தர்கள் எல்லோருக்கும் பத்திரகாளி அம்பிகையின் பரிபூரண அருள்கிட்டும் என்பதில் ஐயமில்லை.

எல்லா வகைத் துன்ப துயரங்களிலிருந்தும் விடுவித்து நீதியான, சுபீட்சமான,அமைதியான, பயமற்ற, சமாதான வாழ்க்கை அமைய வேண்டுமென பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம். தற்காலத் தில் பிரார்த்தனைதான் நாம் செய்யும் கடமையாகும்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**கிரியா கலா விபூஷனம், கிரியாஜோதி சிவஸ்ரீ. சு. சுந்தரராஜக் குருக்கள்**
**(மஹோற்சவ குருக்கள்)**

## வடம் பிடிப்போம் வரம்பெறுவோம் அலை கடலென திரண்டு வாரீர்...

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமான் தேரேறி பவனி வரும் இந் நாளில் அடியார்கள் அலைகடல் எனத் திரண்டு வந்து அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்று ஆனந்தப் பெருவாழ்வு அடைவீர்களாக!

இத்திருநாளில் துன்பங்கள் நீங்கி, இன் பங்கள் பெருகி, அல்லற்படும் உறவுகளின் அவலம் அகன்று, ஆனந்தம் பொங்கி, சண் டைகள் தீர்ந்து, சமாதானம் மலர்ந்து, தொல் லைகள் தொலைந்து, வசந்தங்கள் பெருகி அனைவரும் வளமான - நிறைவான - மலர்வான - மகிழ்வான வாழ்வு வாழ புது யுகம் பிறக்கட்டும் தாயே என்று வாழ்த்தி வணங் குகிறோம்.

வடம் பிடிப்போம்! வரம் பெறுவோம்!
அலைகடலெனத் திரண்டு வாரீர்!

**வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்**
**வட்டு இந்து வாலிபர் சங்க கொழும்புக் கிளை,**
**வட்டு இந்து வாலிபர் சங்க கனடாக் கிளை.**

மலர் அமைப்பு:~ கோபி கிருஷ்ணா



## ஆலய வர

யாழ்ப்பாணத்தின் வலிமேற்குப்பிரதேசத்தில் அ[illegible]திருக்கு நெல் வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் பு[illegible] கோயில் கொண்டு அடியார்களுக்கு அருள் பாலித்த வண் இரு மருந்துய்ய முதலியார் பரம்பரையில் வந்த பெரும ருந்தது. அவ்விடத்தில் உண்டாகி இருந்த புளிய மரத் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையை சேதப்படுத் வட்டுக்கோட்டை கிறிஸ்துவ தேவாலய அமைப்பு வேல புளியமரத்தை தறிக்கும் படி ஏவினார்.அதற்கு அவன் ம அவரை துரத்திச் சென்றது. சிறுதூரம்சென்றதும் பாம் சென்றார்அன்றிரவே அம்மையார் முதன்மையினாரின் தொடங்கினார். அம்மரமே இன்றும் தல விருட்சமாக வருகின்றனர். இது கர்ணபாரம்பரியமான கதை.

பிட்டியம் பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டிய பதி பத் கடவுளுக்குரிய ஆசனமாக மனத்தின் கண் நினைத்து வ[illegible]ழிபட்டு கினார்கள். இங்கே திராவிட முறைப்படி பூசைகள் ந[illegible]ட பெற்

சிறு குடில் அமைத்து வழிபடத் தொடங்கிய இவ்வ[illegible]லயம் 18 அமைக்கப் பெற்று கற்கோயிலாக மாறியது. மூலஸ்தானத்தில் பிரதி தொடங்கி 10ஆவது நாளான பங்குனி மாத உத்தர நட்சத்தி[illegible]த்தில் தே அம்மையப்பர் விக்கிரகங்கள் 1880 ஆம் ஆண்டு அப்[illegible]ாதைய அ

1947 ஆம் ஆண்டு ஆலய அறங்காவலர்களும் ஊர் [illegible]க்களில் பலி கொடுப்பது திராவிட பூசை முறையை ஓர் அங்கமாக விளங்கி கொடுக்கப்படுகின்றது. ஆனாலும் இன்றும் பக்தர்கள் த[illegible]து நேர்த் இவ்வாண்டிலேயே கோவில் ஆகம விதிகளிற்கு அமை[illegible]யாக அ

1978 ஆம் ஆண்டு சித்திரத்தேர்கள் செய்து வெள்ளோட்டம் ந பெற்றது. 1988 ஆம் ஆண்டு நவக்கிரக மண்டபமும்1989 ஆம் ஆண் மண்டபமும் திருத்தி அமைக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு பு மண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெற்றது. 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் கிழக்குப் புறத்தில் 3 தள மகாரா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2008 ஆம் ஆண்டு யாழ்.குடா நாட்டில் திடீரென ஏற்பட்ட பாளின் சப்பறம் இரதோற்சவம் என்பன சிறப்பாக நடைபெற்றமை காணப்படுகின்றது.

30 வருடங்களாக வடமாகாணத்திலேயே யாழ். மண்ணிலே மக்களின் நன்மதிப்பைப் பெற்று திகழ்கின்ற இந்நிறுவனம் சில்வஸ்ரார் 2006 , 2007 ,2008 ஆம் ஆண்டுகளில் வட மாகாணத்தில் சிறந்த உற்பத்தியாளருக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்ட நாயகி தயாரிப்புகளான மிக்சர் , பகோடா , தட்டை வடை ,முறுக்கு , கச்சான்அல்வா, எள்ளுருண்டை, இனிப்பு வகைகள் என தயாரித்து வழங்கி வருகின்றார்கள். எமது தயாரிப்புகளை விநியோகம் செய்யும் வர்த்தக பெருமக்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு உங்கள் ஆதரவைத் தொடர்ந்து வேண்டி நிற்கின்றோம்.

**நாயகி தயாரிப்புக்கள்**
உரிமையாளர்:சு.நிமலேந்திரன் வட்டு க்கிழக்கு, வட்டுக்கோட்டை,

லொறி, கார் , பஸ் , ஆட்டோ, மோட்டார்சைக்கிள், சேவிஸ் செய்து கொடுக்கப்படும் எஞ்சின் ஓயில், கியர் ஓயில், பவர் ஓயில் வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எந்த வீதி ஊடாகவும், வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கு வரலாம்.

**P.S. SERVICE STATION**
**P.S சேர்விஸ் ஸ்ரேசன்**
257/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9247

**இ.ச.பேரம்பலம் நிறுவனம்**
இல. 50, 52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2988 222 3096

மங்களகரமான வைபவங்களுக்கான சொக்கட்டான் வில்லுப்பந்தல்களை சிறப்பாக அமைத்திடவும் சகல வைபவங்களுக்குமான தகரப்பந்தல்கள், கதிரைகள், பாத்திரங்கள், சோடனைகள் என்பவற்றைப் பெற்றிடவும் சகல தேவைகளுக்குமான வாகன வசதிகளைப் பெற்றிடவும் திருமண வைபவங்களுக்குமான சொகுசுக்கார் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம்.
**S.M.T. பந்தல் அன் வாகனசேவை**
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
உரிமையாளர் -ச.மோகனதாஸ்

மங்களகரமான மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான புகைப்பட வீடியோப் பிரதிகளை சிறந்த முறையில் பெற்றிடவும் சொக்கட்டான்,வில்லுப்பந்தல்களை சிறப்பாக அமைத்திடவும் சகல வைபவங்களுக்குமான தகரப்பந்தல்கள் , கதிரைகள்,பாத்திரங்கள் சோடனைகள் என்ப வற்றை ஒரே இடத்தில் பெற்றிட நீங்கள்நாட வேண்டிய ஒரே இடம்
**குரு போட்டோ அன் வீடியோ பந்தல் சேவை**
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
உரிமையாளர்-சி.குருபரன்

யாழ். நகரில் ஆடவர், நங்கையர் மனம் கவர் யவுளிகளை மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**யோகாஸ் ரெக்ஸ்ரையில்ஸ்**
18A நவீன சந்தை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
உள்ளூர் ,வெளியூர் தொலைபேசி அழைப்புகளையும் பக்ஸ், போட்டோ பிரதி, கவரிடுதல்,இன்ரநெற் அழைப்புகளையும் வாகன வசதிகளையும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**யோகாஸ் தொலைத்தொடர்பகம்**
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

நீங்கள் விரும்பிய முறையில் சிகை அலங்காரம் செய்திட நாடவேண்டிய ஒரே இடம்
**ரூபன் சிகையலங்கார நிலையம்**
யாழ்ப்பாணக்கல்லூரிஅருகாமையில் வட்டுக்கோட்டை.

மங்கள வைபவங்களிற்கான சொக்கட்டான் வில்லுப்பந்தல்களையும், பந்தல், கதிரைகள் வைபவங்களுக்கான ஒளியமைப்புகளைப் பெற்றிடவும் நீங்கள் நாடவேண்டிய இடம்
**சுதா பந்தல் சேவை**
காளி கோவிலடிவட்டுத்தெற்கு ,வட்டுக்கோட்டை
உரிமையாளர் -எஸ்.சுதாகரன்

பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**வட்டு இந்து வாலிபர் சங்க புத்தகக் களஞ்சியம்**
யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமை, பிரதான வீதி , வட்டுக்கோட்டை

**கிருஸ்ணா அரைக்கும் ஆலை**
நல்ல முறையில் நெல் உடைத்து, தீட்டியும் மாவாகவும் மிளகாய்த்தூள், சீயாக்காய்த் தூள், ஈர அரிசியை மாவாகவும் உழுந்து, பயறு போன்றவற்றை சிறந்த முறையில் குறுகிய நேரத்தில் அரைத்து மாவாகப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
**கிருஸ்ணா அரைக்கும் ஆலை**
பத்திரகாளி கோயில் அருகாமை
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தரமான முறையில் வெதுப்பக உற்பத்திகளான பாண்,இனிப்பு பாண் , கேக், பணிஸ்,பிஸ்கட் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிடவும் குறித்த நேரத்தில் கேக்வகைகளை பேக்செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**சிறிமுருகன் வெதுப்பகம்**
துன்னாலைச் சந்தி சங்கரத்தை
உரிமையாளர் தி.சுரேஸ்

சகலவிதமான உணவு வகைகள் , சிற்றுண்டி வகைகள் என்பவற்றை சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**பார்த்தீபன் உணவகம்**
தபாற்கந்தோர் அருகில்
பிரதான வீதி ,வட்டுக்கோட்டை

வீடியோ கசற், சீடி, டீ.வி.டி போன்றவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும் தரமான வீடியோ ஓடியோ ரெக்கோடிங்குகளை குறித்த நேரத்தில் உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ளவும் கேபிள்லைன் தொலைக்காட்சியை சிறந்த முறையில் பெற்று பார்வையிடவும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
**ஈசன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்**
மாவடிச்சந்தி , வட்டுக்கோட்டை
(அடைக்கலம் கந்தசாமி ஆலயப் பின்புறம்)

R.S.T. ரோஸ்நாமு
அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் கொப்பறா, எள்ளு மற்றும் இலுப்பைப்பருப்பு போன்றவற்றை 3 கிலோ முதல் ஆயிரம் கிலோ வரை உடன் இயந்திரத்தில் அரைத்து எண்ணையாக ஊற்றவும் நாட வேண்டிய ஒரே இடம்
**பாலன் அரிசி ஆலை**
மாவடிச்சந்தி , வட்டுக்கோட்டை

# சங்கரத்தை பிட்டியம்பதி
# பத்திரகாளியம்மை ஆலய
# ...மணி 08.04.2009







## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை



அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம். அழகான வயற் சூழலில் அம்பிகை வீற்றிருந்து அருள்பாலிக்கும் புனிதபதி சங்கரத்தை. பல்லாயிரம் மக்கள் கூடிப் பொங்கிப் படைத்து பத்திரகாளி ஆச்சி என்று உள்ளம் உருக வழிபாடு செய்யும் தெய்வீகத் திருக் கோவில். இத்திருத்தல உற்சவம் தொடங்கி விட்டால், வட்டுக் கோட்டை வீதி எங்கும் விழாக் கோலம். காவடிகள், கற்பூரச் சட்டிகள் சுமந்த வண்ணம் பக்தர்கள் பவனி வருவர். தீராத துன்பமெல்லாம் தீர்க்கும் தேவியின் திருவருளை அறியாதவரில்லை. அற்புதத் தாய் அழகுத் தேரில் வலம் வரும் நாளில் அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம்.

எம் மண்ணில் அல்லற்பட்டு அகதிகளாக துன்புறும் மக்களை பத்திரகாளித்தாயே காத்தருள்வாய் என முறையிடுவோம். எல்லோரும் இன்புற்று இந்நாட்டில் அமைதியாக வாழ வழிதா தாயே என உரத்து உரைப்போம்.அறம் காக்கும் அகில நாயகியே அமைதி தா என அகத்தால் வழிபாடு செய்ய சங்கடம் தீர்க்கும் சங்கரத்தைத் தாயிடம் ஒன்று கூடுவோம் வாரீர்.

ஆறு திருமுருகன்
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## பரிந்து நீ அருள்வாய் பத்திரகாளியே



சீரோங்கும் நற் சங்கரத்தைப் பதியில்
சீராய் உறைந்து அருளும் தேவி
நீர்க்குளம் போல வயல் சூழ்ந்த போதும்
நிமிர்ந்து தேரில் வந்தருளிய தேவி
காரிருள் எங்கும் சூழ்ந்து
கலிமிக மலிந்ததே தாயே
வீரியத் தேவி தாயே நற்பத்திரகாளி
விரைந்துவந்து எம்மை காப்பாற்றம்மா

நீர்க்குளம் அழகாய் எதிரிலிருக்க
நிழல் தரும் புளியில் உறைவோய்
பாரெங்கும் நற்புகழ் பெற்றிலங்கி
பாங்காய் உறைந்திருப்போய்
சீர் பெறும் நற்தமிழ் சான்றோன் கணபதி ஐயர்
சீராய் ஊஞ்சல் கவி பெற்ற தேவி
பாருளோர் படும் துயர் எல்லாம் நீங்கிட
பரிந்து நீ அருள்வாய் பத்திரகாளியே

சங்கரத்தையூர் சி. சபாநாதன்

## தேரேறி வந்து போரோயச் செய்யம்மா !



உலகம், உயிர் இன்றவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவி நிற்கும் ஆற்றலே அன்னை பராசக்தியாகும். எங்கும் நிறைந்த அவள் எல்லாம் வல்லவள். ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தேவி தான் விரும்பியுறையும் இடங்களாகப் பல பீடங்களை ஏற்றுக் கொண்டாள். அத்தகைய இடங்களுள் ஒன்றே சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளித்தாயின் ஆலயமுமாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயம் அற்புதங்கள் பலவற்றைக் கண்டது. அருள்வடியும் அவளின் ஆனந்த ரூபத்தை அவ்வூர் மக்கள் மட்டுமல்ல பல பிரதேச மக்களும் வெளிநாட்டில் வாழ்பவர்களும் தமது நெஞ்சத்திலே நிறைத்துக் கொண்டனர். பத்திரகாளித்தாய் தேரேறி வீதி உலாவரும் கண் கொள்ளாக் காட்சியைக் காண பல நாடுகளில் இருந்தும் வந்த பக்தர்கள் நிறைந்து நிற்கிறார்கள். ஆயிரக்கணக்கில் கூடி நிற்கும் பக்தர்கள் உன்பாதக் கமலத்தை வேண்டி நிற்கிறார்கள். தேரேறி வந்து போரோயச் செய்யம்மா!

துன்பத்தில் துவண்டு, சீரழிந்து சின்னா பின்னப்பட்டு சிதைந்து நிற்கும் இவ்வுலக மக்கள் ஈடேற வழிகாட்டம்மா! அமைதியும் சமாதானமும் நிலவ அருள் புரியம்மா! வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தாயே உன்னைத் தேரிலே கண்டு நெக்குருகி நிற்கிறோம் அம்மா!. கருணையின் உறைவிடமே! அன்பின் வடிவமே, இருளை அகற்றி ஆன்மீக ஒளியை ஏற்று தாயே! கலக்கமின்றி வாழ நிலைத்து நிற்கும் அமைதியைத் தந்து நாடு சுபீட்சமும், சாந்தியும் அடைய அருள்புரிவாய் தாயே.

அ.குமாரவேல்,விரிவுரையாளர்
பட்டப்படிப்புகள் பிரிவு,யாழ்ப்பாணக் கல்லூரி.

## ...லய வரலாறு

...ந்திருக்கு ...ய சிற்றூர் சங்கரத்தை. அவ்வூரின் மேற் குப் பகுதியில்
...என்னும் புல ...னிய தலத்திலே பத்திரகாளி அம்மை வீரபத்திர சமேதராக
...பாலித்த வண் ...ம் இருக்கிறார். பிட்டியம்பதி என்னும் இடம் பூர்வத்தில்
...வந்த பெருமை ...யானாரின் குமாரர் முதன்மையினார் என்பவருக்குரிய தாயி
...புளிய மரத்த் ...ல் அமர்ந்திருந்த கிளிகள் அயலிலுள்ள நெல்வயல்களில்
...ை சேதப்படுத் ...வதைக் கண்ணுற்ற முதன்மையினார். அக்காலத்தில்(1698
...அமைப்பு வேலை ...யில் ஈடுபட்டிருந்த தச்சுத் தொழிலாளியை அழைத்து அப்
...ற்கு அவன் ம...ப்புத் தெரிவிக்கவே தாமேஅதனைச்செய்யமுனைந்தார்.அப்போது அம்மரத்தின்அடிப்புற்றுக்குள் இருந்து வெளிப்பட்ட நாகசர்ப் பம்
...சென்றதும் பாம்... தலை தூக்கி ஆடி நிற்பதைக் கண்ட அவர் தம் தவறைப் பொறுத்தருளும் படி தம்முட் பிரார்த்தித்து தமது இருப் பிடத் திற்குச்
...மையினாரின் செ...ாப்பனத்திலே தோன்றி தமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்தார்.அடுத்த நாளே அவ் விடத்தில் நிழல் அமைத்து வழிபடத்
...விருட்சமாக வியாபித்து நிற்கின்றது. அவரின் வழித் தோன்றல்களே அன்றில் இருந்து இன்று வரை பூசகர் களாகவும் அறங்காவலர்களாகவும், இருந்து
...

...னால் பிட்டிய பதி பத்திரகாளியம்மை என்றநாமம் அம்பாளுக்கு ஏற்பட்டது. புளியம் மரத்தடியில் கதிரை ஒன்றை வைத்து அதனை வீரபத்திரக்
...நினைத்து வ...ழிபட்டு வந்தனர். அம்பாளின் அற்புதங்களால் கவரப்பட்டு அயற்கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து வழி படத்தொடங்
...பூசைகள் ந...ட பெற்று வந்ததுடன் பொங்கி மடையிடல்,உயிர்ப்பலி கொடுத்தல் போன்ற வைபவங்களும் நடை பெற்று வந்தன.
...தொடங்கிய இவ்வா...லயம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கற்பக் கிரகமும் பிள்ளையார், வைரவர் என்றும் பரிவாரத் தெய்வங்களுக்கும் மண்டபங்கள்
...மூலஸ்தானத்...தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள விக்கிரகங்கள் அக் காலத்தைச் சேர்ந்தவை. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடியேற்றத்துடன்
...உத்தர நட்சத்தி...த்தில் தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இன்று எழுந் தருளி விக்கிரகங்களாக உள்ள
...ஆண்டு அப்பே...ாதைய ஆலய அறங்காவலரான வீரபத்திரர் கதிரவேல் என்பவரினால் அமைக்கப்பட்டன.
...வலர்களும் ஊர் ...க்களில் சிலருமாக சேர்ந்து உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்தினார்கள். இதே ஆண்டு நந்தி தேவர் பிரதிஸ்டை செய்யப் பட்டார் உயிர்ப்
...ஓர் அங்கமாக விளங்கியதால் இன்றும் பூசைகள் நடைபெறும் போதும் பலி கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் நீத்துக்காய் வெட்டி பலி
...பக்தர்கள் த...மது நேர்த்திக்காக சேவல்களையும் கடாக்களையும் கோவிலுக்குக் காணிக்கையாக செலுத்துவதை வழமையாக்கி கொண்டுள்ளனர்.
...கவிற்கு அமை...யாக அமைக்கப்பட்டது.
...செய்து வெள்ளோ...ட்டம் நடைபெற்றது. 1985 ஆம் ஆண்டு திருத்த வேலைகள் நடை பெற்று வைகாசி புனர் பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடை
...மண்டபமும்1989 ...ஆம் ஆண்டு சண்டேஸ்வர மண்டபமும் அமைக்கப்பட்டன. 1987 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரமும் 1995 ஆம் ஆண்டு வீரபத்திர
...2001 ஆம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் நடை பெற்று ஆவணி ரோகிணி நட்சத்திரத்தில் கும்பாபிசேகம் நடைபெற்றது. 2002 ஆம் ஆண்டு வசந்த
...பாபிஷேகம் நடை பெற்றது. 2003 ஆம் ஆண்டு மாசி மாதம் தெற்குப் புறத்தில் மூன்று தள இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.
...புறத்தில் 3 தள மகாராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெற்றது. தற்போது அம்பாளிற்கு மேற்குப் புறத்தில் 3 தள இராஜகோபுரம்
...கின்றன.
...ல் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது ஆலய வெளி வீதியான வயல் வெளி வீதிகளில் வெள்ளம் நிறைந்திருந்த வேளையிலும் அம்
...சிறப்பாக நடைபெற்றமை அடியார்களை மெய் சிலிர்க்க வைத்ததோடு அம்பாளின் ஆலய அற்புதங்களில் ஒன்றாக வரலாற்றுப் பதிவாக அமைந்து

ஆலய அறங்காவலர்.


கஜமுகன்


ஹாட்வெயார்ஸ்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 222 2833 222 7182

உங்கள் நன்மதிப்புப் பெற்ற ஸ்கூட்டர் வகைகள் ,
விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நிறுவனம்
எஸ்.பீ.என். மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

...ரோஸ்நாமு
...ளை மொத்தமாகவும் சில்லறை
...கொள்ளவும் கொப்பரா, எள்ளு
...பருப்பு போன்றவற்றை 3
...ஆயிரம் கிலோ வரை உடன்
...அரைத்து எண்ணையாக
...நாட வேண்டிய ஒரே இடம்
...அரிசி ஆலை
...டிச்சந்தி , வட்டுக்கோட்டை

புதிய சாந்தி அரைக்கும் ஆலை
நல்ல முறையில் நெல் உடைத்து தீட்டியும்
மாவாகவும் மிளகாய்த்தூள், சீயாக்காய்த் தூள் ஈர
அரிசியைமாவாகவும் உழுந்து,பயறுபோன்றவற்றைசிறந்த
முறையில் குறுகிய நேரத்தில் அரைத்து மாவாகப்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
புதிய சாந்தி அரைக்கும் ஆலை
சங்கரத்தைசந்தி அருகாமை,
பிரதான வீதி , வட்டுக்கோட்டை

விநாயகர் தொலைத் தொடர்பகம்
உள்ளூர், வெளியூர் தொலைபேசி
அழைப்புகளையும் பக்ஸ் வசதிகளையும் குறைந்த கட்
டணத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

விநாயகர் தொலைத் தொடர்பகம்
(அத்தியடி விநாயகர் ஆலயம் முன்பாக)
பிரதான வீதி , வட்டுக்கோட்டை
உரிமையாளர் ச.மயூரன் (குமரன்)

ஒளிக்கதிர் அழகுமாடம்
அழகு சாதனப்பொருட்கள் , அன்பளிப்புப்
பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பாதணி
வகைகள், போட்டோப்பிரதி, கவரிடுதல் ,கிற்காட்
என்பவற்றை நீங்கள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
ஒளிக்கதிர் அழகுமாடம்
தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை

சகல வகையான பல சரக்குப் பொருட்கள்,
கட்டடப் பொருட்கள் ,பால்மா வகைகள் ,
கால்நடைத்தீவனங்கள், அபிஷேகப்பொருட்கள்
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

அம்பாள் ஸ்ரோர்ஸ்
(பேபி கடை)
அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை.

# வர்த்தமானியை இரத்து செய்யாவிடின் 22 ஆம் திகதி முதல் போராட்டம்

## வர்த்தக ஒன்றிய சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக ரத்து செய்யாவிடின் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படும் என்று அகில இலங்கை வர்த்தக ஒன்றியம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலை வாய்மூலம் இரத்து செய்யாது மற்றுமொரு வர்த்தமானி ஊடாக இரத்து செய்ய வேண்டும் என்று சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சங்கத்தின் செயலாளர் சமந்த கோரலே ஹப்பு ஆராய்ச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அரச ஊழியர்களுக்கு பாதகம் விளைவிக்கக்கூடிய அம்சங்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று மார்ச் 20 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அவ்வறிவித்தல் ஏப்ரல் 2 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே அரசாங்கம் வெளியிட்ட அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக அரச ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து அந்த வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைபடுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் சிலரும் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தனர். அரசாங்கத்தின் இந்த செய்தியை ஏற்க நாம் தயாரில்லை.

இது தேர்தல் காலம் என்ற படியால் மக்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு யுக்தியாகவே நாம் இதனைக் கருதுகிறோம்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் பல்வேறு கோரிக்கைகளுக்கு இணங்கியே கடன் பெற்றுக் கொள்ளவுள்ளது. அக்கோரிக்கைகளில் இதனையும் ஒன்றாகவே நாம் நினைக்கின்றோம்.

இது போலவே கடந்த காலங்களில் அரசாங்கம் மிகவும் தந்திரோபாயமாக மின்சார சட்ட மூலத்தை அமுல்படுத்தியது.

எனவே அரசாங்கம் படிப்படியாக சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற முற்படுவது இதில் இருந்து தெரிகிறது. எது எவ்வாறு இருந்தாலும் எமது உரிமைகள் பறிக்கப்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

அரச ஊழியர்களின் நியமனங்கள், பதவி, உயர்வு அவர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்களில் இந்த வர்த்தமானி அறிவித்தல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் நாங்கள் அரசாங்கத்திடம் அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றோம். (ஓ-4)

## வானத்திலிருந்து மஞ்சள் துகள்கள்

(கொழும்பு)

வறக்காப்பொல அம்பேபுஸ்ஸ பகுதியில் திங்கட்கிழமை காலை வானத்திலிருந்து மஞ்சள் துகள்கள் விழுந்துள்ளன. வானத்திலிருந்து மஞ்சள் துகள்கள் விழுவதை அம்பேபுஸ்ஸ மகா வித்தியாலயத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர்.

மாணவர்களின் சீருடைகள் மற்றும் வாகனங்களின் மேற்பகுதிகளில் மஞ்சள் நிறத்திலான துகள்கள் படிந்துள்ளன. மஞ்சள் துகள்கள் விழுந்த போது மழை பெய்யவில்லை என்றும், வானம் மிகத் தெளிவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலநிலை அவதான நிலை அதிகாரிகள் மஞ்சள் துகள்களின் மாதிரிகளைச் சேகரித்து பரிசோதனைக்காக கொழும்பிற்கு கொண்டு வந்துள்ளனர். (ஓ-4)

# அரசியல் தீர்வில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் இன்று அரசியல் தீர்வில் நம்பிக்கை இழந்து விட்டார்கள் எனத் தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், இந்த அரசாங்கத்திடம் இருந்து இன நெருக்கடியைத் தீர்த்து வைக்கக்கூடிய அரசியல் தீர்வினை எதிர்பார்க்கவும் முடியாது எனத் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள ரேணுகா ஹோட்டலில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே இந்தக் கருத்துக்களை மனோகணேசன் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.



இங்கு அவர் மேலும் முக்கியமாக தெரிவித்ததாவது,இராணுவத் தீர்வு முனைப்புக்களை நீடிப்பதிலேயே அரசாங்கம் முனைப்புடன் இருக்கின்றது.

அரசியல் தீர்வைக் காண்பதற்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் கூட்டங்களை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணித்த நிலையில் அதில் நாம் கலந்து கொண்டோம்.

ஆனால், அனைத்துக் கட்சிக் குழுவின் பரிந்துரைகளில் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அனைத்துலக கட்சிக்குழுவின் நிபுணர்கள் குழு தயாரித்தளித்த பெரும்பான்மை அறிக்கையைத் திறந்து பார்க்காமலேயே அவர் தூக்கி எறிந்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளைப் பகிரங்கப்படுத்துவதற்குக் கூட அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. பதிலாக இராணுவ நிகழ்ச்சி நிரலை நீடிப் பதிலேயே அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகின்றது.

இதன் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் தீர்விலும் அரசாங்கத்திலும் நம்பிக்கை இழந்து விட்டனர். இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அரசுக்கு கொஞ்சம் கூட விருப்பம் இல்லை.

அரசியல் தீர்வில் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருக்குமானால் முதலில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இதனை நான் அரசுக்கு ஒரு சவாலாகவே விடுக்கின்றேன்.

அரசியல் அமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை தமிழர்கள் 20 வருடங்களுக்கு முன்னரே நிராகரித்து விட்டனர். ஆனால் மாகாண சபைத்திட்டத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு தயாராகவில்லை எனவும் மனோ கணேசன் இங்கு தெரிவித்தார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### அத்தி

Botanical Name - Ficus racemosa
Family - Moraceae
Engl - Country fig
Sing - Attikka

நடுத்தர முதல் பெரிய இலையுதிர் மரமாகும் ; 9-12 மீற்றர் உயரம் ; பட்டை சிவப்பு – சாம்பல் நிறம் ; சமமான பரப்புக் கொண்டது ; இலைகள் மூன்று நரம்புடையவை ; நீள் வட்டம், முட்டை வடிவம், வாள்வடிவம் கொண்டவை ; கனிகள் அடிமரம் மற்றும் பிரதான கிளைகளில் கொத்துக் கொத்தாக தோன்றுகின்றன ; அரைக் கோள அல்லது பேரிவடிவம் கொண்டவை ; கனிந்த நிலையில் நல்ல மணங் கொண்டது. அத்தி மரம் பற்றிய பழமொழிகளில் அத்தியில் பூக்கள் கிடையாது என்ற கருத்து காணப்படும்.

“அத்தி பூத்தாற் போல்”, “கண்டு காய்ப்பது காணாமல் பூப்பது” என்று வழக்கு உண்டு. உண்மையில் அத்தி மற்ற மரங்கள் போன்றே பூத்து காய்க்கின்றது. அத்திக்காய் என்று நாம் குறிப்பிடும் பகுதியே மஞ்சரியும் காயும் இணைந்த உறுப்பாகும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

யாழ். மாவட்டத்தில் குளக்கரை, கோயில் தோட்டங்களிலும் அத்தி மரத்தை காணலாம்.

**100 கிராம் அத்திப்பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம் 1.3 கிராம், கொழுப்பு 0.2 கிராம், நார்ப்பொருள் 2.2. கிராம், கல்சியம் 80.0 மி.கிராம், பொஸ்பரஸ் 30.0 மி.கி, இரும்பு 1.0 மி.கி, விற்றமின் ‘C’ 5.0 மி.கி. கரோட்டின் 162 மைக்ரோ கிராம்.

**மருத்துவப் பயன்கள்**

✦ அத்திப்பிஞ்சு பத்தியத்திற்கானது. அத்திப்பிஞ்சை ஒரு நாள் விட்டு ஒருநாள் சமைத்து உண்ண வயிற்றுப்புண்ணை ஆற்றும். அல்லது அத்திப்பிஞ்சை எடுத்து துவரம் பருப்பிட்டு சமைத்து தொடர்ந்து 3 நாட்கள் உட்கொள்ள குடற்புண் குறையும்.

✦ 50 கிராம் அத்திப்பிஞ்சை 200 மி.லீற்றர் இளநீரில் போட்டு அவித்து எடுத்து காலை உணவுக்கு முன் உட்கொள்ள வயிற்றுப்புண் ஆறும்.

**அத்திப் பழ சர்பத்**

✦ தேனில் பதப்படுத்தியுள்ள அத்திப் பழம் 70 கிராம். பெருஞ்சீரகம் 70 கிராம், ரோஜா மொட்டு 140 கிராம் இலைகளை 4000 மி. லீற்றர் வெந்நீரில் ஊறப் போட்டு 24 மணி நேரம் ஊறிய பின்பு அடுப்பிலேற்றி சிறுகக் காய்ச்சி நன்கு பிசைந்து வடிகட்டி அதனுடன் 1500 கிராம் சர்க்கரையை சேர்த்து தேன் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

பெரியவர்கள் 60. மி.லீ சர்பத்துடன் 60 மி.லீ. நீர்விட்டு படுக்கும்போது உட்கொள்ள மலமிளகி வெளியேறும். குழந்தைகட்கு 2 முதல் 4 தேக்கரண்டி வரை கொடுக்க மல மிளகும். மலக்கட்டு தீரும். 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகட்குத்தான் கொடுக்கலாம்.



**மூலத்திற்கு**

✦ 3 நாட்கள் மரத்திலிருந்த அத்திப் பிஞ்சை எடுத்து இளநீரில் அவித்து, நிழலில் உலர்த்தி இடித்துக் கொள்ள வேண்டும். இதை 1 தேக்கரண்டி அளவு எடுத்து 2 தேக்கரண்டி அளவு தேனில் குழைத்து காலை உணவுக்கு முன் ஒரு முறையும் மாலை 6 மணி அளவில் ஒரு முறையும் உட்கொண்டு வரவும் இவ்வாறு 40 நாட்கள் வரை உட் கொள்ளலாம். இதனால் மூலநோய் நன்கு குணமடையும்.

✦ அத்திப்பழம் காய்ந்தது 10 கிராம் எடுத்து 300 மி.லீற்றர் பாலைக் காய்ச்சி ஆறவிட்டு அதில் அத்திப்பழத்தை போட்டு ஊறவைக்க வேண்டும். பின்பு 10 நிமிடங்கள் கழித்து உண்ண உடல் வறட்சி நீங்கி உடல் வலுவடையும் வாய் நாற்றமும் தீரும்.

✦ அத்திக் கொழுந்து இலை, குப்பைமேனி இலை இரண்டையும் சம அளவாகச் சேர்த்து அரைத்து தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமடையும்.

✦ அத்தியின் அடிமரத்தின் கீழ் வேரை பறித்து வேரின் நுனியைச் சீவிவிட்டால் பால் வடியும். இதுவே அத்திமரத் தெளிவாகும். இந்த நீரை 100-200 மி.லீ வரை வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நீரிழிவு குணமாகும்.

✦ 100 கிராம் அத்திமர வேரின் பட்டையை எடுத்து பஞ்சுபோல தட்டி அரை லீற்றர் தண்ணீரில் போட்டு பாத்திரத்தை மூடி சிறு தீயாகி எரித்து பாதியாக சுண்டியவுடன் இறக்கி ஆறவிட்டு 2 தேக்கரண்டி தேனைக் கலந்து படுக்கு முன் அருந்தி வந்தால் நல்ல தூக்கமேற்படும்.

✦ அத்தி மரத்தின் வேரை பட்டை 500 கிராம் அளவை நன்றாக தட்டி சிறு துண்டுகளாக்கி 20 லீற்றர் தண்ணீரில் போட்டு மூடி கொதிக்கவைத்து பின்னர் ஆறவிட்டு இளஞ் சூட்டில் குளிக்க வேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் குளித்து வந்தால் உடல் வலி நீங்கும். வலியுள்ள இடத்தில் தாங்கும் அளவுக்கு சூடாக ஊற்றிவிட்டு உருவிவிட வேண்டும். மூட்டுவலியும் குணமாகும்.

**அத்திப்பழ பார்லி கஞ்சி**

பார்லி அரிசி 100 கிராம், அத்திப்பழம் 50 கிராம், உலர்ந்த பேரீச்சம்பழம் – 25 கிராம், அதிமதுரம் – 25 கிராம், சுக்குப்பொடி – 1 தேக் கரண்டி, ஏலக்காய் – 5, பால் 10.மி.லீ, பணங்கற்கண்டு – 100 கிராம்.

பார்லி அரியை லேசாக வறுத்துப் பொடி செய்து கால் லீற்றர் நீர்விட்டு வேக வைக்கவும். வேகும்போது பேரிச்சம்பழம், அத்திப்பழம், அதிமதுரம், சுக்குப்பொடி, நசுக்கிய ஏலக்காய் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் காய்ச்சி இறக்கி ஆறவைக்க வேண்டும். ஆறியவுடன் வடிகட்டி அவற்றுடன் பனங்கற் கண்டும் பாலும் சேர்த்து பருக சுவையாக இருப்பது மட்டுமன்றி, உடலில் வெப்பம் காரணமாக வருகின்ற குடல்புண், வாய்ப்புண், வாய் நாற்றம், தொண்டைப்புண், வயிறு எரிச்சல் போன்றவை தீரும்.

குறிப்பு : – அத்திக் காய்களை சேகரிக்கும் போது புழுக்கள் இல்லாத காய்களாக சேகரித்துக் கொள்ளவும். சில அத்திக் காய்களுள் புழுக்கள் காணப்படும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

## இந்தோனேஷிய அரசின் நிவாரண உதவி

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் மோதல் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக இந்தோனேஷிய அரசினால் நிவாரண உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இதில் 500 தொன் அரிசி மற்றும் 2 தொன் மருந்துப் பொருட்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

> ஏறும்மைப் போன்று உபதேசிப்பவர் யாரும் இலர்.
> ஆனால் ஏறும்போ பேசுவதே இல்லை.
>
> – பிராங்க்ளின்

வலம்புரி

## தரமான பரீட்சைப் பெறுபேறுகளைத் தந்து சாதனை படைத்த பின்தங்கிய பாடசாலைகள்

க.பொ.த சாதாரண தரம் 2008 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பெறுபேறுகளின் ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், வளம் குறைந்த – கடந்த காலங்களில் பரீட்சைப் பெறுபேறுகளில் பின்தங்கிய நிலையிலிருந்த பாடசாலைகள் இம்முறை அதிசயிக்கத்தக்கதான பெறுபேறுகளை தந்துள்ளன.

இப்பெறுபேறுகளின் மூலம் பல விடயங்கள் கல்வியதிகாரிகள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் முன் காட்சிப்படுத்தப்படுகின்றன.

அந்தக் காட்சிப்படுத்தல்களில்

- எந்த மாணவரும் கற்க முடியாதவர் என்ற முடிவு நூறு வீதம் தவறானதாகும்.
- செல்வாக்கு,பிரபல்யம் என்ற அடிப்படையில் பௌதிக வளங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை வளர்ச்சியடைந்த பாடசாலைகளுக்கு ஒதுக்கும்போது பின்தங்கிய பாடசாலைகள், அங்கு கற்கும் மாணவர்களின் கல்வி படுகுழியில் வீழ்த்தப்படும்.
- அதிபர்களின் செயற்றிறனான நிர்வாகமும் ஆசிரியர்களின் மன உறுதியுடனான அர்ப்பணிப்பும், பெற்றோர்களிடம் ஏற்படுத்தப்படும் கல்வி விழிப்புணர்வும் பின்தங்கிய மாணவர்களிடம் மறைந்திருக்கும் அதீதமான திறமைகளை – ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவர்களைச் சாதனையாளர்களாக்க முடியும்.

மேற்கூறப்பட்ட முக்கியமானவற்றை பின்தங்கிய –வளம் குறைந்த பாடசாலைகள் தந்த உன்னதமான பெறுபேறுகள் நிஜப்படுத்தியுள்ளன.

அவ்வகையில் உதாரணத்திற்கு யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தின் பெறுபேறுகள் சாதனைக்குரியவையாக கல்வியாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் 2007ஆம் ஆண்டின் க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து பலரும் குறைப்பட்டுக் கொண்ட நிலையில், ஒருவருடகாலத்திற்குள் அந்தக் குறைப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் அங்கு திட்டமிட்ட–ஒழுங்குபடுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக, அந்தப் பாடசாலையின் மாணவர் ஒருவர் எட்டுப் பாடங்களில் 'ஏ' தரச் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார்.

அதேநேரம் கணிதபாடம் உள்ளிட்ட ஏனைய பாடங்களில் பாராட்டத்தக்க பெறுபேறுகளை அந்தப் பாடசாலை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

ஏழைப் பிள்ளைகள் உயரிய பெறுபேறுகளை பெறும்போது அதற்குக் காரணமானவர்களை இறைவன் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

அது மிகப் பெரும் ஆத்ம திருப்தியை அளிக்கும் என்பது உறுதி.

பின்தங்கிய பாடசாலைகள் பெற்றுக்கொள்ளும் உயரிய பெறுபேறுகளுக்குக் காரணமான அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

அவர்களின் அர்ப்பணிப்புடனான பணிக்கு கல்விச் சமூகம் நன்றிக்கடனுடையதாக இருக்கும் என்ற முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் கருத்து கொட்டடி நமசிவாயம் உள்ளிட்ட சிறந்த பெறுபேறுகளைத் தந்த வளம் குறைந்த பாடசாலைகளை மேலும் ஊக்குவிக்கும் என்பது திண்ணம்.

# யுத்த வெற்றியின் விளிம்பில் அரசாங்கம் ; தெற்கை குழப்ப சர்வதேச, தேசிய ரீதியில் சதி

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலை புலிகளுடனான யுத்தத்தில் வெற்றியின் விளிம்பில் அரசாங்கம் இருக்கின்ற நிலையில் தெற்கில் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்த சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு ஒரு போதும் இடமளிக்கக்கூடாது என்று வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் அண்மையில் சில வரித்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி புத்தாண்டு சமயத்தில் சில்லறை வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்தால் ஆகக்கூடிய சில்லறை விலையை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டியேற்படும்.

வரி அறவிடாத நாடு உலகில் எங்கும் இல்லை. பிரதேச சபையினால் கூட வரியில்லாமல் இயங்க முடியாது. வரிப் பணத்தைக் கொண்டே புலிகளின் பிடியிலிருந்து மீண்டு வருகின்ற மக்களுக்கு மூன்றுவேளை உணவு வழங்கப்படுகின்றது என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சு அலுவலகத்தில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது விடுதலை புலிகளுடனான யுத்தத்தில் அரசாங்கம் வெற்றியின் விளிம்பில் இருக்கின்றது.

இதன் பின்னணியில் தெற்கில் ஸ்திரமின்மையை ஏற்படுத்த பாரிய முயற்சியொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் இந்த சதி முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

கடந்த 2008ஆம் ஆண்டில் 23.08 சதவீதமாக பணவீக்கம் காணப்பட்டது. அது இவ்வருடம் 5.3 வீதமாக குறைவடைந்துள்ளது. ஐந்து வருடங்களின் பின்னர் பணவீக்கம் குறைவடைந்துள்ளது. எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது பாரிய வெற்றியாகும். அண்மையில் சில வரி திருத்தங்களுடன் சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் விளைவாக பொருட்களின் விலைகள் அதிகளவில் உயர்வடையாது. புத்தாண்டுக்கு பின்னர் சிறியளவில் சில பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம். ஆனால் வரி சட்டத்திருத்தங்களை காரணம் காட்டி பொருட்களின் விலைகளை சில்லறை வியாபாரிகள் அளவுக்கதிகமாக அதிகரித்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

விலைகளை அதிகரித்தால் அத்தியாவசிய பொருட்களின் ஆகக்கூடிய விலைகளை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடக்கூடிய நிலைமை ஏற்படும். என்னிடம் இருக்கின்ற ஒரே ஆயுதம் வர்த்தமானிதான் என்பதனை கூறிக்கொள்கிறேன் என்று தெரிவித்தார். (ஓ-4)

# மங்களகரமான புது வருடப்பிறப்பு கருமம்

வாக்கிய பஞ்சாங்கப்படி நிகழும் சர்வதாரி வருடம் பங்குனி மாதம் 31ஆம் திகதி (13.4.2009) திங்கட்கிழமை முன்னிரவு 11.7 மணிக்கு அபரபக்க சதுத்தி திதியில் கேட்ட நட்சத்திரத்தில் முதலாம் பாதத்தில் தனுசு லக்கினத்தில்,மிதுன நவாம்சத்தில் செவ்வாய் காலை வேளையில் தாமத குணவேளையில் இப் புதிய விரோதி வருடம் பிறக்கின்றது.

அன்று முன்னிரவு 7.7 மணிமுதல் பின்னிரவு 3.7 மணி வரை விசு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தோய்த்து சிரசில் இலவமிலையும் காலில் விளாவிலையும் வைத்து ஸ்ஞானம் செய்தல் வேண்டும்.

அன்று வெண்ணிறம் கறுப்பு கரை அமைத்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து நீலம் இழைத்த ஆபரணம் அணிந்து விக்னேஸ்வரம் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து குருபெற்றோர் முதலிய பெரியாரை வணங்கி ஆசி பெற்று இன சனங்களுடன் அள வளாவி அறுசுவை உண்டிகளுடன் தயிர்ச்சோறு,உப்பு என் பவை சேர்த்தருந்தி சுகந்த வாசனைத் திரவியம் ,சந்தனம் புஷ் பம் அணிந்து தாம்பூலம் தரித்து கண்ணாடியில் முக தரிசனம் செய்து சித்திரை முதலாம் திகதி 14.04.2009 செவ்வாய்க் கிழமை தங்கள் வீடுகளில் சூரியனுக்கு பொங்கல் பூசை செய்து மங்கலமாக கொண்டாடுக.

*மருத்து நீர் தயாரித்தல்*

தாளம்பூ,தாமரைப்பூ,மாதுளம்பூ,துளசி, விஷ்னுகிராந்தி சீதேவியார் செங்கழுநீர் ,வில்வம்,அறுகு, பீர்க்கு,பால், கோசலம்,கோமயம்,கோரோசனை,மஞ்சள்,மிளகு,திற்பலி,சுக்கு இவைகளை சுத்தமாக நீரிலிட்டு காய்ச்சிக்கொள்க.

சங்கிரம தோஷநட்சத்திரங்கள்

அச்சுவினி,பரணி,கார்த்திகை முதல் கால் ஆயிலியம் விசாகம் நாலாம் கால் அனுசம் ,கேட்டை,ரேவதி இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர்தேய்த்து தோஷம் நீக்கி தான தரும வழிபாடுகளை விசேடமாகச் செய்க.

*கைவிசேஷம் உகந்த நேரம்*

16.4.2009-வியாழக்கிழமை மு.ப. 7.25 மணி தொடக்கம் 9.16 மணிவரை, 16.04.2009-மாலை6.13 மணி தொடக்கம் முன்னிரவு 8.5 மணி வரை

# வடமராட்சி கல்வி வலய எல்லே போட்டி முடிபுகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டியில் பெண்களுக்கான போட்டி உடுவில் மகளிர் கல்லூரியிலும் ஆண்களுக்கான போட்டி மனோகரா விளையாட்டு மைதானத்திலும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

இப்போட்டியில் பெண்கள் பிரிவில் 16 பாடசாலைகளும் ஆண்கள் பிரிவில் 14 பாடசாலைகளும் பங்குபற்றியுள்ளனர். இதில் பெண்களுக்கான இறுதிப் போட்டியினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபரும், ஆண்களுக்கான இறுதிப் போட்டியினை வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரமும் ஆரம்பித்து வைத்தனர்.

இப்போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் முதலாம் இடத்தை ஹாட்லிக்கல்லூரியும் 2 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், 3 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், பெண்களுக்கான பிரிவில் முதலாம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் 2 ஆம் இடத்தை மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலையும் 3 ஆம் இடத்தை இமையாணன் அ.த.க பாடசாலையும் பெற்றுக் கொண்டன என வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் தெரிவித்துள்ளார். (ஓ)

# தமிழ் - சிங்கள புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்ந்து வரும் விடுமுறைகளை முன்னிட்டு, யாழ். பிரதேசத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் யாவும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக எதிர்வரும் 10 ஆம் 12 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் 1 மணி வரை திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் வழமைபோல் திறக்கும் கிளைகள் அனைத்தும் 11 ஆம் திகதியும் திறந்திருக்கும்.

அத்துடன் எதிர்வரும் புத்தாண் டுத்தினமான ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 8 மணி முதல் சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் சேவை நிலையங் களிலும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதுடன் கைவிசேடம் வழங்கப்படும் என்பதையும் 15 ஆம் திகதியும் காலை சுபவேளையில் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்கள் மேற் கொள்ளப்படும் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.க ஆனந்தராஜா அறியத்தந்துள்ளார். (ஓ)

# ஹற்றன் நஷனல் வங்கியின் புது வருடத்தை முன்னிட்ட சேவைகள்

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கி கிளைகள் எதிர்வரும் விடுமுறை நாட்களில் வாடிக்கையாளர் நலன் கருதி கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என வங்கி முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் 2 மணிவரை திறந்திருக்கும். புது வருடத் தினமான 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 2 மணி வரையுள்ள சுபவேளையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களும் கைவிசேஷமும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



என் குழந்தாய், நான் வேண்டுவன ; இரும்பை ஒத்த தசைகளும் உருக்கைப் போன்ற நரம்புகளும், அவற்றுள் இடியை ஒத்த மனமும் ஆகிய இவற்றையே. பொய்யைவிட உண்மை அளவில்லா வலிமையுடையது. அவ்வாறே நேர்மையும் இவை உன்னிடம் இருந்தால், அவற்றின் வலிமை ஒன்றாலேயே நீ முன்னேற முடியும்.

மலைபோல் உயர்ந்த தடைகளையும் தாண்டிச் செல்லும் மன வலிமை உன்னிடம் உள்ளதா? உலக முழுவதும் வாளைக் கொண்டு உன்னை எதிர்த்து நின்றாலும், நீ சரியென நினைப்பதைச் செய்யத் துணிவாயா? உன் மனைவியும் குழந்தைகளும் உன்னை எதிர்த்தாலும், உனது பணமெல்லாம் போய் விட்டாலும், உனது புகழ் அழிந்தாலும், உனது செல்வம் ஒழிந்தாலும் அப்போதும் விடாது பற்றுவாயா? அப்போதும் அதையே தொடர்ந்து, நீ கொண்ட குறியை நோக்கி முறையாக முன் செல்வாயா!

# ஒடுக்கப்படும் சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்கும் இடதுசாரி முன்னணியின் கரங்களை பலப்படுத்துங்கள்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

ஒடுக்கப்பட்டு வரும் சிறுபான்மை சமூகங்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஒரே அமைப்பு இடதுசாரி முன்னணியேயாகும் என்று மேற்படி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். மேல் மாகாண சபைத் தேர்தலில் தம்மோடு இணைந்து கொண்ட இடதுசாரி கட்சிகள் பலவற்றின் உறுப்பினர்களை கொழும்பு குருமெதுர கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இன்று தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் பலரும் இளைஞர், யுவதிகளும் கடத்தப்பட்டு வருகின்றார்கள்.

இவர்களுக்காக குரல் கொடுத்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம். ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகார செயல்பாட்டை நிறுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

பெரும்பான்மையினர் அனுபவிக்கின்ற சகல உரிமைகளையும் சிறுபான்மை சமூகங்களும் அனுபவிக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கு இடம் கொடுக்கப்பட வேண்டும். அதாவது அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

இன்று அது நடக்கிறதா? இல்லை. எனவே இந்த உரிமைகளை வென்றெடுக்க, அதற்காக குரல் கொடுக்க எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய இடதுசாரி அமைப்பிற்கு வாக்களித்து எங்கள் கரங்களை பலப்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் சட்ட மூலத்திற்கு எதிராக கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பை வெளிப்படுத்தியதற்காக போகம்பர சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன்.

அத்தோடு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டேன். இருந்தும் எமது கொள்கை பிடிப்பிலிருந்து நாம் விலகவில்லை.

இன்று நான் சொல்வது என்னவென்றால், இலங்கையில் தேசிய பிரச்சினை இந்தளவுக்கு விஸ்வரூபம் எடுத்ததற்கான காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையேயாகும்.

இன்றும் எனது அரசியல் நடவடிக்கைகளுக்கு பல எதிர்ப்பு நடவடிக்கைகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இருந்தும் ஒடுக்கப்படும் மக்களுக்கான போராட்டத்திலிருந்து நான் ஒருபோதும் ஒதுங்கிக்கொள்ள மாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் நிறைவின் போது இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டாளர்களால் விக்கிரமபாகு கருணாரட்னவின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக இணையத்தளம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. Support Pahu என்ற பெயரிலேயே அந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. (ஓ-4)

## பால் மா இறக்குமதிகளை ஆராய்வதற்கு தெரிவுக்குழு

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா இறக்குமதியில் நடைபெறுகின்ற முறைகேடுகளை ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கோரவிருக்கின்றது.

சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டாரவிடமே இவ்வாறு கோரவிருப்பதாக தேசிய சுதந்திர முன்னனி அறிவித்துள்ளது. பால்மா இறக்குமதி செய்யப்படுகின்ற போது இடம் பெறுகின்ற முறைகேடுகள் மற்றம் சுகாதார சீர்கேடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயும் வகையிலேயே இந்த தெரிவுக் குழுவை அமைக்குமாறு கேரவிருப்பதாக முன்னணி தெரிவித்துள்ளது. (ஓ-6)

## விண்ணப்ப முடிபுத்திகதி கால நீடிப்பு

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதிய வர்த்தக மானியில் பிரசுரமாகிய "இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) பதவிகள்" என்ற பதவி வெற்றிட விளம்பரத்தில் பிரசுரமாகிய தகைமையில் சிறு மாற்றம் செய்யப்பட்டதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியும் இம்மாதம் 17 ஆம் திகதிவரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 08-04-2009 ஆம் திகதிய வர்த்த மானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் பார்வையிடலாம். (ஓ)

# மொழிப் பிரச்சனைத் தீர்வுக்கு இருமொழிக் கல்விப் போதனை அவசியம்

## நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

இலங்கையில் மொழி உரிமை பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால், பாடசாலைகளில் தமிழ் பிள்ளைகளுக்கு சிங்கள மொழிக் கல்வியும், சிங்கள பிள்ளைகளுக்கு தமிழ் மொழிக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். அதன் மூலமே மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

நுவரெலியா சகவாழ்வு மன்றத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா ஹெரிடேஜ் ஹோட்டலில் நடைபெற்ற மொழியுரிமை செயற்திட்டம் தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சக வாழ்வு மன்றத்தின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் ஜே.பி. வெஸ்லி தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் குமாரசிறி தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பொழுது அரசாங்க தொழில்களில் சேர்த்துக் கொள்ளும் தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியிலும், சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியில் சேவையாற்ற 6 மாத காலத்திற்குள் கற்றுக் கொள்ள வேண்டும்.

சகல உத்தியோகத்தர்களும் இருமொழிகளிலும் சேவையாற்றக்கூடிய தகுதி பெற்றிருந்தால் இந்நாட்டில் மொழி பிரச்சினைகள் இருக்காது.

அத்தோடு பொது மக்களின் தேவைகளையும் இலகுவாக தீர்க்கலாம் என்றார். (ஓ-4)


வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்



எண்ணெய்க் காப்பு
08.04.2009
காலை 10.00 மணி-மாலை வரை

கும்பாபிஷேகம்
09.04.2009
காலை 09.00-10.08 மணிவரை

பருத்தித்துறை – புலோலி மேற்கு
அருள் மிகு ஆலடிப் பிள்ளையார் ஆலய பஞ்ச குண்டபக்ஷ –புனராவர்த்தன பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.
09.04.2009

ஆல், அரசு, வேம்பு ஆகிய மூன்று தெய்வீக விருட்சங்களும் ஒன்றாக மூல விருட்சங்களாக அமையப் பெற்றும் மூர்த்தி, தலம், தீர்த்தமும் ஒருங்கே அமையப் பெற்றும் கீர்த்தி மிக்க உற்சவ தெய்வீகத் திருத்தலமாக விளங்குகின்ற மேலைப் புலோலி ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தின் பஞ்ச குண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் 09.04.2009 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் 10.08 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் குருமார்கள் விபரம்

ஆசி வழங்கும் சர்வபோத காசிரியர்கள்
சிவஸ்ரீ. சதா சிவசுப்பிரமணியக் குருக்கள் - புங்குடுதீவு
சிவஸ்ரீ. கைலை வாமதேவக் குருக்கள் - நயினாதீவு

சிறப்பிக்கும் குருமார்கள்
சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள்-நீராவியடி
சிவஸ்ரீ சி.குகதாசக் குருக்கள்-ஆனைக்கோட்டை
சிவஸ்ரீ பாலசண்முகக் குருக்கள்-கட்டுடை
சிவஸ்ரீ கௌரிபாலக் குருக்கள்- நெல்லியடி
சிவஸ்ரீ சி. வாசுதேவக் குருக்கள்-அல்வாய்
சிவஸ்ரீ செல்வகுமாரக் குருக்கள்-அராலி
சிவஸ்ரீ க.சுதாகரக் குருக்கள்-சுன்னாகம்
சிவஸ்ரீ சிவபாலக் குருக்கள்-திக்கம்

பிரதிஸ்டா பிரதம குரு
சிவஸ்ரீ.சிவ. சிவகுமாரக் குருக்கள்
(அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.)

யாக சம்ரக்ஷசர்கள்
சு.கிரிதரன், சா.விஜயசங்கர் சர்மா,
பிரியதர்ச சர்மா, வா. சசிதர சர்மா

ஆலய நித்திய பூசகர்
பிரம்மஸ்ரீ சோமசுந்தர சர்மா

சர்வசாதகாசிரியர்கள்
பிரம்மஸ்ரீ ப. சனாதனசர்மா B.B.A. (சாவகச்சேரி)
சிவஸ்ரீ பால கணேஸ்வரக் குருக்கள்
(பிரதம குருக்கள் நயினை நாகபூசணி அம்மன்)
பிரம்மஸ்ரீ சோ. சுசீந்திரராஜ சர்மா (கோப்பாய்)
பிரம்மஸ்ரீ சி. சிவகுகேந்திர சர்மா
(பிரதம குரு திக்கம் காளி கோவில்)
கட்டட நிர்மாணமும் வர்ண பூச்சு வேலையும்
சிற்பகலாநிதி விஜயரத்தினம்(ரவி)
சிற்பக் கலை வேந்தர் திரு. கோ. வேலுப்பிள்ளை
மங்கள வாத்தியம்
M.S. விஜயகுமார் குழுவினர்

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடை பெறும். மண்டலாபிஷேகத்தில் பங்கு கொள்வோர் ஆலய நிர்வாகத்திடம் தொடர்பு கொள்க. கும்பாபிஷேக விழாக் காலங்களில் ஆசார சீலர்களாக வருகை தந்து தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், பூவகை, கரும்பு, தேங்காய் எண்ணெய், கற்பூரம் போன்ற சிவத்திரவியங்களை ஆலயத்தில் சமர்ப்பித்தும் சரீரத் தொண்டாற்றியும் ஆலடிப் பிள்ளையாரின் அளவில்லா அருளைப் பெற்று ஆனந்தமாக வாழ்வீர்களாக.

அனைவரும் வருக ஆலடியான் அருள் பெறுக

புலோலி மேற்கு
பருத்தித்துறை

சுப மங்களம்

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா சபை.

# இந்துக்கல்லூரிகளுக்கிடையிலான போரில்

# உத்தமகுமரன் சிறப்பான துடுப்பாட்டம் கொக்குவில் இந்து முதல்இன்னிங்ஸில் 290



(யாழ்ப்பாணம்)

உத்தமகுமரனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 290 ஓட்டங்களை எடுத்தது.

இந்துக்கல்லூரிகளுக்கிடையிலான போர் என வர்ணிக்கப்படும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையிலான 2 நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது ஆண்டுப் போட்டி நேற்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் எளிமையாகவும் அமைதியாகவும் ஆரம்பமானது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக்கல்லூரி அணித்தலைவர் ஏ.பிரியதர்சன் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி ஆரம்பத்தில் 105 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த எஸ்.உத்தமகுமரன்-கே.இராகுலன் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 200 ஓட்டங்களைக்கடந்தது.



இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து நம்பிக்கையளித்தது.

இறுதியில் பகீந்திரனின் அதிரடியான துடுப்பாட்டமும் கை கொடுக்க கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 94.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையுமிழந்து 290 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏ.உத்தமகுமரன் 186 பந்துகளில் (11 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 97 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்து 3 ஓட்டங்களால் சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார்.

அத்துடன் கே.இராகுலன் 66 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் ஆர்.பகீந்திரன் 31 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் அணித்தலைவர் வி.ஜனார்த்தனன் 26,கே.ஜனு தாஸ் 24 மற்றும் பி.பங்குஜன் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் ஏ.பிரியதர்சன்,எஸ்.உமாதரன், என்.திருத்தணிகன் மற்றும் பி.சங்கீதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் எஸ்.செந்தூரன், ஆர்.நிரூஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் நேற்றைய முதல்



நாள் ஆட்டம் நிறைவடைய இரண்டாவதும் இறுதிநாளான இன்று யாழ்.இந்துக்கல்லூரி அணி தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்கும்.

# மழையின் வருகையால் நியூசிலாந்து தப்பியது; தொடரைச் சுவைத்து இந்தியா சாதனை




(வெலிங்டன்)

மழையின் வருகையால் 3ஆவது டெஸ்ட் சம நிலையில் முடிபடைய இந்திய அணி தொடரை 1:0 என்ற கணக்கில் சுவீகரித்தது.

இதன் மூலம் நியூசிலாந்து மண்ணில் 41 ஆண்டுகளின் பின் டெஸ்ட் தொடரை வென்று தோனி தலைமை யிலான இந்திய அணி வரலாற்றுச் சாதனை படைத்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20,5 ஒரு நாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூ சிலாந்து அணி 2:0 என்ற கணக்கிலும் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றியது.

இந் நிலையில் தொடர்ந்து நடைபெற்ற டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டி சமனிலையானது.

தொடரின் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3 ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 379 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 197 ஓட்டங்களை எடுத்துசகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 182 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 434 ஓட்டங்களை எடுத்து 7விக்கெட்டுக்களையிழந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதனால் நியூசிலாந்து அணிக்கு 617 ஓட்டங்களை வெற்றி இலக்காக இந்திய அணி நிர்ணயித்தது.

இந் நிலையில் பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 167 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ரெய்லர் சதமடித்து நம்பிக்கையளித்தார்.

எனினும் ஹர்பஜன்-டெண்டுல்




கர் ஜோடியின் சுழலில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப்பறி கொடுத்த நியூசிலாந்து அணி 281 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களைஇழந்து திணறியது.

மதிய போசன இடை வேளைக்கு




பின் மழை பெய்ய ஆரம்பித்தமையால் போட்டி இடை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து மழை பெய்ய போட்டி சமநிலையானதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதில் டானியல் விக்டோரி 15, ஒபிறின் 19 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் ரையிலர் 107 ஓட்டங்களையும் பிராங்லின் 49, குப்தில் 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் 4 விக்கெட்டுக்களையும் சகீர்கான், டெண்டுல்கர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பதம் பார்த்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் அடித்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் காம்பீர் தெரிவானார்.

# விடுதலைப் புலிகள் இனி தலைதூக்க முடியாது



## ஜனாதிபதி மகிந்த பேட்டி

விடுதலைப்புலிகள் இனி தலைதூக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் போர் முடிபடையும் நிலையில் இருப்பதாக கூறிய ஜனாதிபதி விடுதலைப்புலிகள் தமிழர்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

விடுதலைப்புலிகளை முற்றிலுமாக அழித்த பிறகு தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இலங்கை வெற்றி பெற்று வருகிறது. இலங்கை மண்ணில் இருந்து பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்த பிறகு வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெற்று இலங்கையின் வடக்கு பகுதி சீரமைக்கப்படும்.

எங்களை யாராலும் அழிக்க முடியாது என இறுமாப்புடன் இருந்த விடுதலைப் புலிகள் இனியும் தலைதூக்க முடியாது என ஜனாதிபதி கூறியுள்ளார். (ச-5)

# பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களை மீட்க நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் 17 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்பில் உள்ள பொதுமக்களை மீட்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை பாரிய மனிதநேய நடவடிக்கையாக அமையும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பகுதியை முழுமையாக மீட்டிருப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் அறிவித்தனர்.

மூன்று தினங்கள் நடந்த கடுமையான சண்டையின் பின்னர் 500 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்திருந்தனர்.

எஞ்சிய விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள்ளே சென்றிருப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.

இந்த நிலையிலேயே பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் ஆரம்பிக்கவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை வடக்கில் நடத்த அரசு திட்டம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது தொடர்பாக ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக்குழு நேற்று விரிவான முறையில் ஆராய்ந்துள்ளது.

இதனை நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்த சுகாதாரத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இது தொடர்பாக தமது கட்சியின் நாடாளுமன்றக் குழு ஆழமாக ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வடபகுதியில் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் தற்போது இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதால் இந்தப் பகுதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வெகு விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் தேர்தலை எப்போது நடத்துவது என்பதற்கான திட்டவட்டமான நாள் எதுவும் நேற்றைய சிறப்புக் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட வில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-5)

# வன்னிப் பாதுகாப்பு...

பாதுகாப்பு குறித்து சர்வதேச அமைப்புக்கள் கவலை வெளியீட்டுள்ளன.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் தாம் தாக்குதல்களை மேற்கொள்வதில்லை என இலங்கை அரசு தொடர்ந்து கூறிவரும் நிலையிலும் அண்மையில் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன், படையினர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் தாக்குதல் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என கூறினார்.

இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சரிடம் பி.பி.சி. கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

ஐ.நா. தெரிவிக்கும் கருத்துக்களுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்ற அதே நேரம் இப்படி எங்களிற்கு விடுக்கப்படும் கோரிக்கைகள் பல. அவர்களிற்கு சரியான விபரங்கள் கிடைத்திராததன் அடிப்படையிலேயே விடப்படு கின்றன.

தமிழ் சமூகத்தின் மனங்களை வென்றெடுக்க வேண்டியதே எமது நோக்கம். அதன் அடிப்படையிலேயே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நாங்கள் சுடுவதில்லை.

பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை மற்றும் பிற புள்ளி விபரங்கள் தொடர்பில் ஐ.நா மன்றம் வெளியிட்ட அறிக்கைகள், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாம் இவ்வாறு தவறாக இருந்த போது அவர்களிற்கு சரியான தகவல்களை கூறினோம். அவர்களின் தரவுகளில் உள்ள பிழைகளை அவர்களிற்கு எடுத்து விளக்கினோம். இவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று அமைச்சர் ரோகித போகொல்லாகம கூறினார். (ச-14)

# பாதுகாப்பு வலயம்...

தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட காயமடைந்தவர்கள் மற்றும் மருத்துவமனையின் அடிப்படை வசதிகள் தொடர்பாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பி.பி.சிக்கு தகவல்கள் வழங்கியுள்ளார்.

இவை தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

இங்கு பாதுகாப்பு வலயம் மீது தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகிறது. இன்றும் (நேற்று) ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்தே இவை மேற்கொள்ளப்படுகின்றன. பிற்பகல் 6 மணிவரை 120 காயமடைந்த பொதுமக்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

15 இறந்தவர்களின் உடலங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. தற்போது வைத்தியசாலையில் 450க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

குழந்தைகளின் நிறைகுறைவடைதல் தொடர்பாக கடந்த வாரம் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தோம். இரண்டு வருடத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நிறை குறைந்த பிள்ளைகளின் வீதம் 42 சதவீதமாக இருந்தது.

தற்போது 62 வீதமாக அதிகரித்துள்ளது. இது பாரிய ஒரு பின்னடைவு. இதனை நிவர்த்தி செய்வதாயின் சிறுவர்களுக்கான போஷாக்கு உணவுகள், போதுமான பால்மா வகைகள் வழங்கப்படவேண்டும்.

இது தொடர்பான அறிக்கையினையும் நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். எமது வைத்தியசாலையில் இருந்து 750 முதல் 800 மீற்றர் வரையிலான தூரத்தில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

அவர்களை எம்மால் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. வைத்தியசாலைப் பகுதியிலேயே மிக அண்மையான தூரத்தில் படையினர் உள்ளனர்.

மற்றைய பிரதேசங்களில் ஒரு கிலோமீற்றர், ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ளனர்.

இங்கு வருகின்ற நோயாளிகளுக்கு குறைந்த அளவிலாவது அடிப்படை மருத்துவ வசதிகளை மேற்கொள்ளக் கூடிய நிலையில் நாங்கள் உள்ளோம்.

ஆனால் முற்று முழுதான வளங்களை நாம் இடம்பெயர்ந்து வரும்போது இங்கு கொண்டுவரவில்லை.

இங்கு நோயாளிகளை தரையில் பாயிலேயே கிடத்தியுள்ளோம். இங்கு ஒரு கட்டில் கூட இல்லை. மருந்துகளும் முற்றுமுழுதாக வந்துசேரவில்லை.

ஒருதொகுதி மருந்து திருகோணமலையில் உள்ளது. அவை கொண்டுவரப்பட வேண்டும். அத்துடன் வழமையாக அனுப்பப்படவேண்டிய மருந்துகளையும் விரைவாக அனுப்புமாறும் சுகாதாரத் திணைக்களத்தை கேட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (ச-14)

# "போர்ப் பிடி...

எனவும் வலியுறுத்தியிருக்கின்றார்.

பாதுகாப்பு வலயம் எனக் குறிப்பிடப்படும் பகுதியைத் தவிர ஏனைய அனைத்துப் பகுதிகளையும் படையினர் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், போர் இப்போது பெருமளவு பொதுமக்கள் தங்கியுள்ள பாதுகாப்பு வலயத்தை நோக்கி திரும்பியிருப்பது ஆழ்ந்த கவலையளிப்பதாகவுள்ளது எனவும் இது தொடர்பாக வெளியீட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (எ-5)

# போர் நிறுத்தத்தை அமுல்...

காயமடைந்துள்ளதாகவும் கூறியுள்ள அவர், விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்றுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கும் நிலையில் பொதுமக்களிற்கான ஆபத்துக்கள் அதிகமாகியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அங்கு பொதுமக்கள் இருக்கும் வரை அந்தப் பகுதி மீது அரசு தாக்குதல்கள் நடத்தாமல் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு திரும்பியுள்ள வோல்ட்டர் கீலின் இந்த முகாம்களுக்கு மனித நேய உதவி அமைப்புகள் தங்கு தடையின்றி அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களில் வெளிக் காவல் கடமையில் இருந்து படையினர் அகற்றப்பட்டு அங்கு பொலிஸார் பணியமர்த்தப்பட வேண்டுமெனவும் தற்போது 57ஆயிரம் பேர் முகாம்களில் இருப்பதாகவும் இவர்களில் சிறப்புத் தேவை உடையவர்களையும் பாதுகாப்பிற்கு எதுவித அச்சுறுத்தலையும் விடுவிக்காதவர்களையும் உடனடியாக விடுதலை செய்தால் அது முகாம்களில் இடநெருக்கடியை குறைப்பதுடன் சர்வதேச மனித நேய தரப்புடன் ஒட்டியதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-14)

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்த...

நோர்வே அரசாங்கம் இலங்கையில் போரை நிறுத்த நாள்தோறும் முயற்சி செய்து வருவதாகவும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் தமிழ் மக்கள் தொடர் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் கவலைகள் புரிகிறது.

நோர்வே அரசு தன்னால் முடியுமான முயற்சிகளை தற்பொழுது செய்து வருகின்றது.

நோர்வே அரசு இலங்கையில் போரை நிறுத்த ஒன்றுமே செய்யவில்லை என தமிழ் மக்கள் கூறுகிறார்கள்.

ஆனால் நோர்வே அரசு தங்களின் பிரச்சினைக்கு அதிகமாகவே செயற்படுகிறது என இலங்கை அரசு கூறுகிறது என சொல்ஹெய்ம் கூறினார்.

உலகில் முக்கியமாக மனிதப் பேரவலம் இலங்கையிலேயே தற்பொழுது நடைபெறுகிறது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரில் 2 இலட்சம் வரையான மக்கள் சிறிய இடத்தில் அடக்கப்பட்டுள்ளார்கள். அங்கு உணவு,தண்ணீர், மருந்துப்பொருட்கள் தட்டுப்பாடு நிலவுகிறது என்றார்.

இதேவேளை இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் சமாதான செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் முன்னர் அனுசரணையாளர்களாக செயலாற்றிய நோர்வேக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜொனஸ்கர் ஸ்டொயருக்கும் இடையில் அமெரிக்காவில் இந்தப் பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட இரத்த ஆற்றை தடுப்பதற்கு நோர்வே சலிக்காமல் எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடினோம் என சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ஹிலாரி கிளின்டன் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியை இராணுவத்தினர் மீட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வலயங்கள் மாத்திரமே இன்னமும் எஞ்சியிருப்பதாகவும் பாதுகாப்பு தரப்பினர் அறிவித்துள்ள நிலையிலேயே இலங்கை விடயம் தொடர்பாக இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னர் அனுசரணையாளர்களாக பணியாற்றிய நோர்வேயும் அமெரிக்காவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. (ச-5)


யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

க.பொ.த. (உயர்தர) வகுப்புகளுக்கான அனுமதி-பிரிவு 2011

கலை,வர்த்தக,விஞ்ஞான வகுப்புகளுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. தகுதியுடைய மாணவர்கள் உடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி 23.04 .2009

வி.மாணிக்கம்
அதிபர்

(C-2281)



மலிவு விற்பனை

சகல விதமான றேடியோ, கசெற் றெக்கோடர், ரிவி, டெக், சிடி-டிவிடி பிளேயர், சாச்சர் லைட், கிறைன்டர், அயன், ஹொட்பிளேட், மின் விசிறி, சுவர்-கைமணிக்கூடுகள் ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ் வாங்கிக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்

நியு சிற்றி றேடர்ஸ், 319 K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

தற்போது மேற்படி ஸ்தாபனம் கஸ்தூரியார் வீதியிலிருந்து K.K.S. வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கு யாழ் நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை.

319 (A) K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3226

(2494)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.